பாசிலையரம்பையம்பழுவத்துநாப்பட்டபசுத்தநெட்டிலைய்கமுகம்
பாளைவாள்கைக்கொண்டுசிறுகுறுந்தோட்டுப்பலாக்கோடுசாயவறுகால்
மூசுமதுவட்டமேபலகையாகக்கொண்டுமொய்த்தும்பையருவிசூடி
முன்னேப்படர்ந்ததுணைவண்ணச்செழுஞ்சிறைமுருக்கியபழிக்குமீளக்
காசுதெறுகாந்தளந்துகில்வீக்கிவளையெலாங்கறுவியாகாயத்திலா
கண்டலன்பதிநோக்கிவிண்டலம்புகுவளைகடுப்பவளனெழுகுசாரல்
தேசுபெறுதிருவஞ்சனத்திரியில்வருகுழவிசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௩)

பாடேறுமொலிதிரைப்பகுவாயமகரப்பணைக்கோடுபோன்றநெட்டைப்
பாசிலைமு[illegible]த்தாழைமலர்மலர்ந்துவரிப்பசும்புலாறுற்றமாற்றக்
காடேறியாற்றுதயின்றதெள்ளமுதினைக்காலுவனபோன்றெங்கணுங்
கடிநாறுபுன்னையஞ்செடிதோறுமுத்தீன்றுகடல்மேலிறைப்பவலைவாய்க்
கோடேறிமுத்தீன்றுகரைமேலிறைப்பக்குழீஇயவெண்சோதிமூடிக்
கொண்டநகரைக்கண்டுசெஞ்சோதியாகக்குறித்துமுடிமணியிறைத்துச்
சேடேசன்வழிபடுமனந்தமங்கலவாணசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (ச

நீரமுங்காமலுலகன்னைபன்னுட்பெறநிரம்புசூன்முற்றியீன்ற
நீ[illegible]லவளாகத்துமன்பதைகளெல்லாநெடும்பசிக்கனலேயினுற்
பார்மூவகாமற்சுரந்தொழுகுசையப்பருப்பதமுலைத்தடத்திற்
பாலாறெனப்பெருகுகாவேரியாறுபாய்பழனத்திலுழுநரீட்டங்
கூரமுங்காதகோட்டெருமையேறுழுபாடல்கொண்மூவிடைக்கரந்து
கோதில்யாழ்வல்லகந்திருவரமுதப்பாடல்கொள்வதுகடுக்குமேன்மை
தேரழுந்தூர்தனிலுமேயெழுந்தருள்குழவிசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (ரு

அஞ்சிறைத்தும்பிபாட்டயருந்துழாய்மௌலியண்ணலுமருச்சுனனுநீர்
அணிதெண்டிரைப்புணரியாடிவருநாளிலங்காபுரிக்கணேவகுப்பு

மஞ்சிவருமேனியானோதச்சரக்கூடமாயணைவகுப்பனென்ன
வாருதிக்கரைதொட்டிலங்கையளவுங்கட்டும்வாள்விசயன்மதமடக்கப்
பஞ்சவர்சகாயநினைநினையக்கணத்தினிற்பகிரண்டகூடமட்டும்
பாய்ந்துசரபஞ்சரம்பஞ்சுபஞ்சாய்த்துகள்படப்படநொறுக்கிநீண்ட
செஞ்சிறைத்துணைகுவித்தயனின்றசேவகன்சிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௬)

இயல்குணத்தநுமனிவனொருவனிக்கவிவெள்ளமெழுபதுமகிழ்தவனைநீ
யென்னினைந்தெதன்செய்தாயேழாயெனக்குறிப்பாலிவைவிளம்பியின்னும்
பயனுறுசரக்கூடம்வனையென்னவனுமநீபாய்ந்துபாரென்னவந்தப்
பஞ்சரத்தினின்மாயனங்கொளித்திடமுன்படிக்குக்குதித்தெழுப்பிப்
புயன்முதுகுநெளியாமைகண்டுவில்லாளியுன்போலில்லையின்றுமுதலாய்
பொருகளந்தொறும் வெற்றிபெறுகென்றுகொடியொன்று புனைவித்துவிசய
செயகவித்வசனெனும்பேருங்கொடுத்தவன்சிறுதேருருட்டியருளே [னுக்குச்
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௭)

போராடிலங்கையிற்கடவுள்வாராவென்றுபொருமுசானகியுயிரையும்
பூவையவள்புக்கவழியெங்கவழியென்றேபுலம்புபெருமானுயிரையும்
பேராதுறக்கமோடுணவுநீங்கியவிளையபெருமாளினுருயிரையும்
பிறிதுகதியிலையென்றுமறுகியவிபீடணப்பெருமாளினுருயிரையும்
பாராளவைத்ததொருபரதனுயிரையுமெழுபதுவெள்ளத்தவுயிரையும்
பலபலதொகைப்படுசராசரத்துயிரையும்பாதுகாத்தருளுமெங்கள்
சீராளனைமிக்கதாராளனையழகுசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௮)

பொறிவழியிலேயுருத்திரமூர்த்திபலகலன்புனைவழியிலாதிமூர்த்தி
புலனுதவுவழியிலம்புயமூர்த்தியோரைம்புலாதிகளடக்கினமையால்
சருவவழியிலுமிக்கமுதலானமூர்த்திநெறிதருமந்தரயந்தரங்களுட்
டகுமோமீநீமூரும்அரிமர்க்கடாயவரதவமுள்ளபந்தரமூர்த்தி
குறிமகாதைரியவலங்காரகமவீரகோரவுநததண்டமூர்த்தி
கூறரியதெய்வமனுவாறிரண்டையுமுளங்கொண்டவர்க்கெளியமூர்த்தி
செறிவரியதெய்வங்களுக்கெல முதன்மூர்த்திசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௯)

இழிமாலைமுடைநாறுதலைமாலையுளவிராவணன்வென்றிமாலைவிழுநாள்
இருண்மாலையைததள்ளியருண்மாலையைப் பூட்டுமீரந்துழாய்மாலையுடையா
கொழுமாலைமேனிவெண்டலைமாலையான்மகிழ்குபேரன்மணிமாலைவாங்கிக [ன்
குளிர்மாலைமதிநுதலியெனையீன்றசந்தரகுலகுணபாலைதன்னைநோக்கிப்
பொழிமாலைவார்குழலியோர்விசயமாலையிதுபுனையெனவளிப்பவாங்கிப்
போதுறைபிராட்டியநுமான்வருகவருகநீபூணெனவழங்குமுதத்தின்
செழுமாலைபோலெனதுமொழிமாலைகொண்டுளானசிறுதேருருட்டியருளே
திக்குளோர்பரவவருமுக்கண்மாருதியமலசிறுதேருருட்டியருளே. (௧௦)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

அநுமார் பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

உ

சிவமயம்

சௌரசாந்திரமாசமும் விரதங்களும்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம்

தேவஸ்தானம்

வேதசிவாகம சித்தாந்த சங்கவெளியீடு



கலியப்தம் 5038

தாது௵ புரட்டாசி.

[illegible] அச்சியந்திரசாலை

[illegible]

உ

கணபதி துணை

சௌரசாந்திர மாசமும் விரதங்களும்

சைவாபிமானிகளே!

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தாரால் "நிசமும் தாத்வரு பிள்ளையார் சதுர்த்தி, சரசுவதிபூசை கந்தர்சட்டி, மாசிவராத்திரி இவைகளை எப்போது கொண்டாடவேண்டும்?" என்னும் முகராமத்துடன் வெளியிடப்பட்ட துண்டுப்புத்தகம கண்டனம். அதிலே "சௌரமானக் கணக்குப்படி இவ்வாண்டில் பிள்ளையார் சதுர்த்தி ஆவணிமீ 5-ந் ௳யிலும், சரஸ்வதிபூசை புரட்டாதிமீ 9-ந் ௳யிலும் கந்தர்சட்டி ஐப்பசிமீ 5-ந் ௳யிலும் வருகின்றன. இங்ஙனமே நமது சைவப் பஞ்சாங்கம் கூறுகின்றது" என்று எழுதியிருக்கிறார்கள். மற்றைய பஞ்சாங்ககாரர்கள் சதுர்த்தி புரட்டாதிமீ ௪-ந் ௳யும், நவராத்திரி பூசாரம்பம் புரட்டாதிமீ ௩௧-ந் ௳யும், சட்டி கார்த்திகைமீ ௫-ந் ௳யும் கொள்ளுதல் வேண்டும் என்று நிர்ணயி[illegible]னர். மற்றைய பஞ்சாங்ககாரர்கள் நிர்ணயித்தே[illegible]மங்களுக்குச் சம்மதமாகவிருக்கின்றது.

தெ. சை. சங்கத்தார் "சாந்திரமானத்தைக் காட்டிலும் எத்தனையோ கோடிமடங்கு மேலானது சௌரமானம்" என்னும் தமது கொள்கையைச் சாதிக்குமாறு சந்திரனையும், சாந்திரமானத்தையும் உளம்போனவாறு தூஷித்து எழுதியிருக்கின்றார்கள்.

சந்திரன் சிவபெருமானுக்குச் சிரோபூஷணமாயும், அவருடைய மூன்று திருக்கண்களுள் ஒன்றாயும், அட்டமூர்த்திகளுள் ஒரு மூர்த்தியாயும், சிவவிரதங்களுட் சிறந்த சோமவாராதிபனாயும், விளங்குகின்றான். சௌரியைப் பிரத்தியதிதேவதையாகப் பெற்றவன். நிசாபதியாயுள்ளவன். இவை முதலிய மகத்துவம் வாய்ந்த சந்திரனையும், அவன[illegible] பற்றும் மாதத்தை

தும் இகழ்ந்து எழுதுவது சபைக்கு அடாது! அடாது!" சந்திரனை விலக்கிவிடுவோமாயின், அவனுடைய கதியாலாய திதியில்லாமற் போவதோடு திதியைப் பிரதானமாகவுள்ள விரதங்களும் இல்லையாய் முடியும்.

இன்னும் அவர்கள் "தமிழ் மக்களுக்குரியது சௌரமானம்; ஆரியப் பிராமணருக்குரியது சாந்திரமானம. ஆகமங்களெல்லாம் சௌரமாதததிலேயே எல்லாவிதமான விழாக்களும் சிறப்புகளும் செய்யப்பெறவேண்டுமென விதிக்கின்றன" எனவும், "சுமார்த்தர்கள் பண்டைக்காலததில் மகமதியரைப் போலவே பிறையை வைக்து மாதத்தைக் கணக்கிட்டு வந்தார்கள். இவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன வளர்பிறை முதல்நாள் முதலாக அமாவாசை முடிய ஒரு மாதமெனக் கண கணக்கிடத் தொடங்கினர். தம் சாந்திரமாதங்களுக்குச் சௌரமானிகளாகிய தமிழ்மக்களின் தமிழ்மாதப் பெயர்களையே வைத்து வழங்குவாராயினர். இவர்கள் சித்திரை என்பதை 'சைத்திரம்' என்றும், வைகாசி என்பதை 'வைசாகம்' என்றும், ஆனி என்பதை 'சேட்ட'மென்றும இங்ஙனமாகப் பிற மாதங்களையுந் திரித்து வழங்குவாராயினர்" எனவும் எழுதியிருக்கின்றார்கள்.

உத்தரகாரணம் சிவராத்திரிவிதி படலத்தில்:- "ப்ரதமாதினமாரப்ய அமாவாஸ்யாந்திகம ஸமாத த்ரிம்சததினம் பிரகுர்வீத சாந்திரமான மிஹோச்யதே" பிரதமை முதல் அமாவாஸை அந்தமாயுள்ள முப்பது தினங்கள் சாந்திரமானமென்று சொல்லப்படும், என்று கூறப்பட்டிருக்கிறது.

சகலாகமங்களையும் ஆராய்ச்சி செய்யும்பொருட்டுப் பரமசிவத்தை நோக்கித தவஞ்செய்து முககணபெற்ற திரிலோசன சிவாசாரியர் செய்த சித்தாந்த ஸாராவளி 'அர்க்கேயுகமகதே' என்னும சுலோகத்துக்கு அநந்தசிவாசாரியர் தாம் செய்த வியாக்கியானத்தில்,

"சாந்திரமாஸஸ்து தத்தந்மாஸ சுக்லபக்ஷ பௌர்ணமாசீயுக்த தத்தந்நக்ஷத்ரப் பிரதான பூத பௌர்ணமாசி மத்யே பரிவர்த்தமானோ மவாஸ்யாந்தச்ச"

சாந்திரமாசமானது சௌரமாசத்திலே சுக்லபக்ஷப் பூரணையோடுகூடிய அவ்வந்நக்ஷத்திரத்தையே பிரதானமாகவுடை

வ பூரணையை நடுவில் உடையதும் அமாவாசையை அந்தத்தி லுடையதுமானது" என்று சொல்லியருளினார்.

பூரணை வரும் நக்ஷத்திரத்தின் பெயரே அவ்வம்மாசப் பெயராக வழங்குகின்றது. ஐப்பசி மாசத்திலே அசுவினி நக்ஷத்திரத்தில் பூரணை வருவதால் அந்தமாசம் ஆசுவயுக் எனப் பெயர்பெறும். விசாகநக்ஷத்திரத்தில் பூரணை வருதலால் வைகாசியீ வைகாசம் எனப் பெயர்பெறும். பூரட்டாதி உத்தரட்டாதிகளில் பூரணை வருதலால் புரட்டாதியீ பாத்திரபதம் எனப்படும். இப்படியே மற்றைய மாதங்களுக்கும் வந்தபெயர்கள் சாந்திரமானப் பெயர்களேயாம். இதுவே சோமசம்பு சிவாசாரியர் முதலிய ஆன்றோர்களுக்கும் கருத்தாதலைச் சோமசம்பு பத்ததி வியாக்கியானம் முதலியநூல்களால் அறிந்துகொள்ளலாம்.

"சைத்திரார்க்ஷம் மேஷமாஸேது சைத்ரமாஸம் ப்ரகீர்த்திதம்"

மேஷமீதத்தில் சித்திரை நக்ஷத்திரம் வருதலால் அது சைத்திரம் எனப்படும்.

"பர்வயுக்த இருக்ஷஞ்ச தத்தன் மாசாக்ய மேவவா"

பூரணையோடுகூடிய நக்ஷத்திரப்பெயரே அவ்வம்மாசப் பெயராகின்றது. என உத்தரகாரணாகம சிவராத்திரி விதிபடலத்தில் வருதலானும் இவ்வுண்மை உணரப்படும்.

ஆகமங்களிலே சௌரம் சாந்திரம் நக்ஷத்திரம் சாவனம் என மாசங்களை நான்காக வகுத்து அவற்றில் உற்சவங்களைச் செய்யும் முறையும் விதிக்கப்பட்டிருக்கின்றன. உத்தரகாரணத்தில்,

"சௌரமானம் யதாசம்போ சாந்த்ரவிர்த்தி இனம்ததா"

சிவபெருமானுக்குச் சௌரமானம் எங்ஙனமோ அங்ஙனமே சாந்திரமானமும் என்று கூறப்பட்டுள்ளது. இதனாலே சைவ சமயிகளுக்குச் சௌரம் சாந்திரம் என்னும் இரண்டு மாசங்களும் வேண்டற்பாலனவேயாம்.

இங்ஙனமாகச் சைவாகமங்களிலும் பூர்வாசாரியர்கள்செய்த பத்ததிகளிலும் இருத்தலினாலே சை. சி. சங்கத்தார் சொல்லுகிறபடி சாந்திரமாதம் சுமார்த்தப் பிராமணர்களுக்கு மா

த்திரம் உரியதல்ல என்பதும், அவர்கள் சார்பாகச் சண்டையிட்டுத் தொடங்கிய 'பேர்கொண்ட' மாசங்கள் அல்ல என்பதும் சித்திரை முதலிய தமிழ்மாதப் பெயர்களைச் சேர்த்து வழங்கினாரல்லர் என்பதும் வெளியாகின்றன.

சைவ. சி. சங்கத்தார் "சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் அதிமாசம் என்பது பொய்மாசம்; ஆதலின் அதனைத் தள்ளிவிடவேண்டும் என்று கூறுவார்கள்' என்றும் எழுதியுள்ளார்கள்.

காமிகாகமம் காலவிதி படலத்தில்,

"அதிமாசம் த்யஜேத் தீமான் கேசிதேவம் வதந்தி தே'

புத்திமானாகிய ஆசாரியார் விசேடமாக அதிமாசத்தை விடவேண்டும் எனவும், சித்தாந்தசாராவளி வியாக்கியானத்தில்,

"மேஷயுக்தசைத்ராதி தௌணமாஸோ ஹ்யபத்யயம் ஸ்ருதமே தஸ்மின் மாஸே யதா யஸ்மின் ஸ்யாதமாவாஸ்யாத்வயே ஸதி மேஷாதி சங்கிராந்தகௌ அமாவாஸ்யாத்வயே ஸதி அதிகோ அதிமாஸ ஸ்யாத் பூர்வமாஸஸ்ய மலமாஸதயா இந்யாவ

தர்சத்வயமத்ர க்ரமய யதா சங்க்ரம தோஷவி
மலமாஸஸ் ஸவிக்ஞேயஸ் ஸர்வகர்ம பஹிஷ்க்ருத."

மேடசூரியனோடுகூடிய சைத்திராதி மாசங்களில் இரண்டமாவாசை வருமாயின், அதிகமாசமாகும் முற்பது மலமாசம் என்பது கருத்து. மலமாசம் எல்லாக் கருமங்களினும் நீக்கத்தக்கது" எனவும், சொல்லப்பட்டிருக்கின்றன. அதுவன்றிச் சிவாக்கிரயோகீந்திர சிவாசாரிய சுவாமிகள் 'அதிகமாசம் வந்தால் அதைவிட்டு நிஜமாசத்தில் செய்க' என்று கிரியாதீபிகையிற் சொல்லியிருக்கின்றனர். ஆதிபரமாசாரியராகிய சிவபெருமானுடைய திருவாக்கின்படியே மலமாசத்தை ஆப்தர்கள் நீக்கிவந்தனரேயன்றி 'ஏமாற்றப்பட்டார்கள்' அல்லர்.

இவ்வாற்றால், மூலாகமங்கட்கும் பூர்வாசாரியர்கள் செய்த பத்ததிகளுக்கும் மலமாசத்தை நீக்கிவிடுதல் சம்மதமேயாம் என்பது நிலைநிறுத்தப்பட்டமை காண்க.

சங்கத்தார் நவராத்திரியைச் சௌரமானப்படி நிர்ணயிப்பதாக எடுத்துக்கொண்ட ஆகமப் பிரமாணங்கள்,

(சாமிகாகமம்)

கந்யாசிதப்பிரதம மாரப்ய நவம்யந்த முபாஸிதம்: புரட்டாதியீ பூருவபக்கப் பிரதமை முதல் நவமி முடிவாய நவராத்திரி உமாதேவியின் விரதம். (இது இடைச் செருகல்)

(பூர்வகாரணம்)

"அதாதஸ்ஸம் ப்ரவக்ஷ்யாமி நவராத்ரி விதிக்கிரமம் ஆசுவயுக் சுக்லபக்ஷேது பிரதிபந்நவம்யந்தகே பிரதிபத் தினமாரப்ய விரதோத்சவமதாசரேத்"

இனி நவராத்திரி விதிக்கிரமத்தைச் சொல்லுகிறேன். ஐப்பசியீ சுக்கில பக்ஷத்துப் பிரதமை முதல் நவமி முடிவாயுள்ள ஒன்பது நாளிலும், பிரதமை தொடங்கி விரதத்தையும் உத்ஸவத்தையும் செய்க, என்பனவேயாம், இப் பிரமாணங்களினால் நவராத்திரி புரட்டாதி மாதத்திலே ஆசுவிஜ சுத்தமாகிய பிரதமையில் ஆரம்பிக்கவேண்டும் என்று ஆகின்றது. தாம் பிரமாணமாகக்கொண்ட இச்சுலோகங்களுக்கு வலிந்து பொருள்கொள்ளத் துணிந்து எழுதியதாவது:—

"இதில் அஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம். சாந்திரமான ஐப்பசி பெரும்பாலும் புரட்டாதியிலேயே பிரதமைமுதல் நவமிமுடிய வருமாதலால் இந்தவாக்கியம் தோன்றியது. ஆதலால் இதனைச் சாந்திரமான ஐப்பசி என்றுவது சௌரமான ஐப்பசி யென்றுவது மயங்கி விடுதல் கூடாது. சாந்திரப்பெயராக இங்கே கூறப்பட்ட ஆஸ்வயுக் சௌரப் புரட்டாதியையே யுணர்த்தும்" என்பது.

அமரசிங்கர் தமது நிகண்டில் புரட்டாதிக்கு "நபஸ்ய, ப்ரௌஷ்டபத, பாத்திரபத" என்பனவே பெயராகும் என்றும், ஐப்பசிக்கு "ஆசுவின, இஷ, அச்வயுக்" என்பனவையே பெயராகுமென்றும், குறித்திருக்கின்றார். இதனால், அசுவயுக் என்ற பதம் ஐப்பசியை யுணர்த்துமேயன்றி ஒருபோதும் புரட்டாதியை யுணர்த்தாது. இது சமஸ்கிருத நிகண்டு படிக்கும் சிறுவர்களுக்கும் நன்றாக விளங்கும்.

"ஆகமங்களெல்லாம் சாந்திரமானமாகக் கூறப்பெறும் மாதப் பெயர்களையெல்லாம் சௌரமான மாதப்பெயர்களாகவே கொள்ளவேண்டும்" என்கிறார்கள்.

சாந்திரமாதப் பெயர்கள் செளரமாதப் பெயர்களாக மாட்டா. செளரமாதப் பெயர்கள் மேடம், இடபம் முதலியன. ஸ்மார்த்தர்களாலே திரித்து வழங்கிய பெயர்கள் என்று கூறினார்கள் பின்பு அப்பெயர்களைச் செளரமாசப் பெயர்களாகக் கொள்ளவேண்டும் என்கிறார்கள். இவர்கள் மதியென்னே!

சை. சி. சங்கத்தார் உத்தரகாமிகாகமத்திலே, துர்க்கா பூஜாவிதிபடலத்தில்வரும்.

"கந்யாகதே ஸவிதரி சுக்லப க்ஷேஷ்டமீயுதா
மூலநட்சத்ர சம்யுக்தா ஸாமஹா நவமீஸ்ம்ருதா"

என்னும் வசனத்தைக்கொண்டு "மகா நவமியென்பது கன்னியாராசியாகிய புரட்டாசியில இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதியாகின்றது" எனகிறார்கள்.

துர்க்காபூசா விதிபடலத்தில், இந்தச் சுலோகத்துக்கு அடுத்த சுலோகம்,

"அச்வயுக் சுக்ல பக்ஷேவா அஷ்டமீ மூலசம்யுதா
ஸாமஹா நவமீ நாமநாதனை லோகயேதி துர்லபா

அல்லது ஐப்பசியீ சுக்லபட்ச அட்டமியும மூலமும் கூடிய நவமி மகா நவமியென்று பெயாபெறும இது மூவுலகத்தும கிடைத்தற்கரியது" எனறு கூறுகினறது. இதறகடுதத வாக்கியம் இச்சுலோகததை நிச்சயப்படுததுகின்றது. அவ்வாக்கியம்:-

'அஷ்டம்யாஞ்ச நவம்யாஞ்ச ஜகன்மா தரமம்பிகாம்
பூஜயித வாச்சுவயுக் மாஸி விசோகோ ஜயதிதுவிஷ.
சநதர் ஜயதி ஹநம் காரைகட்கோத்காதகயான் வரான்'

அரசன் ஐப்பசி மாதத்தில் அட்டமியிலும் நவமியிலும் தேவியைப்பூசித்து, சோகமின்றிப் பகைவரை வெலலுகிறான. வாளையுயாத்திக்கொண்டு வெட்டவரும் பகைவரை உம்காரத்தினாலே உறுக்கி ஜயிக்கிறான்" என்பதே.

இந்த சுலோகங்களை ஆராய்ந்து பார்ததால் மகாநவமிக்கேற்ற காலம்யாது என்பது புலப்படும். சாநதிரமான ஐப்பசி (ஆச்வயுக்)மீ பெரும்பான்மை கன்யாமாததில வருமாதலால பொதுவாகக் கன்யாமாசம் சொல்லப்பட்டது என்பதும அதிகமாதத்தினாலே கன்னி மாததில் ஆச்வயுஜம் வராவிட்டால்,

ஆசுவயுஜத்தைப் பிரதானமாகக் கொள்ளவேண்டும் என்ப தும் ஆச்வயுஜ சுக்கிலபக்ஷ அட்டமியில் மூலநக்ஷத்திரம் வரா தவிடத்து ஆச்வயுஜ சுக்ல அட்டமி நவமிகளில் பூசிக்கவேண் டும் என்பதும் புலப்படுகின்றன. முற் சுலோகங்களைப் பிர மாணமாகக் கொண்டு தம் கொள்கைக்கு மாறானது என்று நினைத்துப்போலும் 'அஷ்டம்யாஞ்ச' என்னும் சுலோகத்தைப் பிரமாணமாகக் கூறாது விடுத்தனர்.

மேலும், சை. சி. சங்கத்தார் "காமிகாகமம்" நவராத் திரி கூறுமிடத்தில் "சௌரமானேன கர்த்தவ்யா நவராத்தி ரிர் விசேஷத: சாந்திரமானே நகர்த்தவ்யா கிருதஞ்சேத் ராஷ்ட்ர நாசனம் என்று கூறுகிறது. இதனால் நவராத்தி ரியைச் சௌரமானத்திலே தான செய்தல்வேண்டும். சாந் திரமானத்தில் செய்யக்கூடாது செய்தால் நாடு அழியும் என்ற பொருள் வெளிப்படை" என்று எழுதியிருக்கிறார்கள்.

இந்த வசனத்தைக் காமிகாகமத்தில் எப்படலத்திலி ருந்து எடுத்தார்களோ! இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதிற் பிரயோசனம் இல்லை. ஆயினும் இச்சுலோகம் முற்கூறிய காமிகாகம காரணாகம வசனங்களுக்கு முரணாகுமோ எனின் முரணாகாது. எதனால் எனின; சித்தாந்த சாராவளி வியாக்கி யானததில்,

"அதஏவ உத்தராயணே மாகாதி ஷாண்மாசா
ஸ்சௌராச் சாந்திரா இதிதுவி பிரகார:
ததா தக்ஷிணாயனே சிராவண்யாதி ஷாண் மாஷ:
மாக மாசோ யதா மகரஸ்தி தார்கேணயுக்த:
ததா ஸௌரமாசத் துவேந முக்கியம்
யதா மாகமாசோ கும்பரவிணாயுக்த:
ததா சாநதிர மாஸதவேந முகய:
ஏவம் சர்வேஷாம் மாஸாநாம்:
சௌர சாந்த்ரத்துவம் யோஜ்யம்"

உத்தராயணத்திலே மாசி முதலிய ஆறுமாசங்களும் சௌர மானம் என்றும் சாந்திரமானம் என்றும் பெயர்பெறும். தக்ஷிணாயனத்திலே ஆவணி முதலிய ஆறுமாசங்களும் அவ் விருவகைப் பெயர்களைப் பெறும், (சாந்திர)மாகமாதம் எப் பொழுது மகரசூரியனோடு கூடிவருகிறதோ அப்பொழுது

சௌரமாசத்தாற் சிறந்தது. மாகமாசம் எப்பொழுது கும்பரவியுடன் கூடியதோ அப்பொழுது சாந்திரமானத்தாற் சிறந்தது. இவ்வாறே மற்றைய மாதங்களுக்கும் சௌரமான சாந்திரமானங்கள் கொள்ளத்தக்கன.

"மாகாதி மாசாநாம்: மகராதி ஸஞ்ஞாஸ்தத்ரைவோக்தா"

இன்னும் மாசி முதலிய (சாந்திர) மாசங்களுக்கு மகரம் முதலிய பெயர்களும் வரும்.

என்று இந்த சாந்திரமாச சௌரமாச நிர்ணயங்கள் நில்வாச காரிகை முதலிய பலநூற் பிரமாணங்கொண்டு விளக்கப்பட்டிருக்கின்றமையினால் எங்கள் சோபசம்பு பத்ததி வியாக்கியானத்திலும் இப்படியே சொல்லப்பட்டது.

அங்ஙனமாயின் ஆச்வீசசுக்கப் பிரதமை கன்னி மாதத்தில் வருதலால் அது சௌரமாதத்திற் சிறந்தது. மற்றைய திதிகள் துலாமாதத்தில் வருதலால் சாந்திர மாதத்திற் சிறந்ததே என்று கூறுபவர்கள் சித்தாந்த சாராவளி வியாக்கியானத்தில் "மாகாதி மாசாநாம் மகராதிஸஞ்ஞாஸ்தத்ரை வோக்தா" (மாசி முதலிய சாந்திரமாசங்களுக்கு மகரம் முதலிய பெயர்களும் வரும்) என்று கூறுவதனால் அறிந்து கொள்வார்களாக. மேற்கூறிய பிரமாணங்கொண்டு ஐப்பசிக்குக் கன்னி எனனும் பெயர் சிறப்புவிதியாற் பெறப்பட்டதாகையால் சௌரமாசக் கொள்கையும் உடையன என்று அறிவார்களாக.

காமிகாகமத்தில் "கந்யா சிதப்பிரத மாமாரப்ய" என்று விதித்தலினாலும், பூர்வகாரணத்தில், 'பிரதிபத்தின மாரப்ய' என்றிருத்தலாலும், யாமளா தந்திரத்தில் 'பிரதமாயாம் சமாரப்ய' என்றிருத்தலாலும், நவராத்திரிக்கு ஆரம்பம் பிரதானமானது. கன்னியில் அமாவாஸ்யை கழிந்த பிரதமையும் ஆச்வீஜசுக்கப் பிரதமையும் ஒன்றே. இதுவே நவராத்திரி விரதாரம்பத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதமை தொடக்கம் தசமிவரையும் கன்யா மாசத்தில் வருதலும் சிறுபான்மை துலாமாசமுற் கூற்றில் ஸமாப்தியாவதும் ஆகமங்களுக்குச் சம்மதமாம்.

காரணாகமத்திலுள்ளதென்று அவர்கள் காட்டிய 'மாஸே பாத்ரபதே...பாஷிதம்' எனனும் சுலோகம் அச்சுப்புத்தகத்தில் இல்லை.

இதுவரைகாட்டிய காமிகம் காரணம் முதலிய பிரமாணங்களால், ஆச்வயுஜசுத்தப் பிரதமையிற் றொடங்கி நவமியீறாகச் செய்யவேண்டுமென்பது பெறப்பட்டது. புராணங்களும் இவ்விதமே கூறுகின்றன.

ஸ்காந்த புராணம்

"நவம்யாந்தவ்ரதம் புண்யம் மாஸிசாச்வயுஜேஸிதே"

(சாந்திர) ஐப்பசிமீ சுக்கிலபக்ஷ நவமியில் அநுஷ்டிக்கத்தக்க புண்ணியமான விரதம்.

விநாயகசதுர்த்திக்கு சை. சி. சங்கத்தார் சுவாயம்புவாகமத்தில் இருப்பதாக மூன்று சுலோகங்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அச்சுலோகங்களின் கருத்து "விநாயகோற்சவத்தைச் சிறப்பாகக் கூறுகின்றேன். தீர்த்த தினத்தை முதலில் நிச்சயித்துக்கொண்டு அதற்குமுன் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, ஏழாவது தினத்திலாவது, ஒன்பதாவது தினத்திலாவது கொடியேற்றவேண்டும். ஆவணிமீ சதுர்த்தியில் மஹோற்சவம் செய்யவேண்டும். அத்தினத்தில் தீர்த்தோற்சவமும் செய்யலாம். அல்லது பஞ்சமியிலாவது செய்யலாம்" என்பது.

காரணம் (பக்கம் 580) குமாரதந்திரம் முதலிய நூல்களில் ஒருநாள் மூன்றுநாள் ஐந்துநாள் உத்ஸவங்களுக்கு துவஜாரோகணத்தை நீக்குதல்வேண்டும் என்று காணப்படுகின்றது. அவர்கள் காட்டிய சுலோகங்களில், மூன்றுநாள் ஐந்துநாள் உத்ஸவங்களுக்கும் துவஜாரோகணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருநாளுற்சவம் சொல்லப்படவில்லை. ஒருநாளுற்சவம் சதுர்த்தியிற் செய்வது குற்றமென்று வேறுமொரு சிருஷ்டி செய்வார்கள் போலும். பஞ்சமியை உற்சவாந்தமாகக் கொள்ளின், சதுர்த்தி உத்ஸவம் இல்லாமற் போகின்றது. சதுர்த்தியை அந்தமாகக்கொள்ளின் பஞ்சமியிலாவது என்ற பதம் பிரயோசனமற்றதாகின்றது. இக்காரணங்களால் மேற்படி சுலோகங்கள் அவசியநிமித்தம் எழுந்தனபோலும். அன்றியும், இவ்வசனங்கள் சதுர்த்தி விரதத்தைப்பற்றிக் கூறியனவல்ல. விநாயகருக்கு மஹோற்சவம் செய்யும் காலத்தைப்பற்றிக் கூ

றுகின்றன. விநாயக சதுர்த்தியைப்பற்றிக் காமிகம் முதலிய ஆகமங்களிற் கூறப்படவில்லை. புராணங்களிற் சொல்லப்பட்டது. ஸ்காந்தம் உபதேசகாண்டத்தில்,

"விக்கினேசுவரஸ் யாபிவ்ரதம் சுக்ரவாரே சுபாவனம்
சதுர்த்தியாந்து வ்ரதம்புண்யம்ப்ரோஷ்டபங்மாஸிகேஸிதே"

விநாயகக்கடவுளுடைய விரதம் வெள்ளிக்கிழமையிற் பரிசுத்தமானது. சாந்திர (பாத்திரபதப) புரட்டாதியில் சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் அனுட்டிக்கப்படுவது புண்ணியமானது என்று கூறப்பட்டுள்ளது. பவிஷ்யத் புராணத்திலே,

"மாசி பாத்ரபதேசுக்லே சதுர்த்யாம் கணநாயகம்

பாதத்திரபதிமீ சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் விநாயகரைப் பூஜிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விநாயகபுராணம் "பந்தமறு மாவணித் திங்களின் வளரும் சதுர்த்தி" எனக் கூறுகின்றதேயெனில்; சௌர ஆவணி மீ பூர்வபக்ஷசதுர்த்தியும், சாந்திர பாதத்திரபத சதுர்த்தியும் ஒன்றென்பதே கருத்து. இவ்விரதங்களைச் சாந்திரமானப்படி கொள்வது சிவாகமங்களுக்கு விரோதமன்று.

விநாயகபுராணத்தில்வருவதற்கு சாந்திரங்கலந்த ஆவணியே என்று பொருள்கொள்ளவேண்டும். இங்ஙனம் பொருள்கொள்ளவே மூலபுராணங்களுக்கும் சம்மதமானது. புராணிகர் தமக்கும் கருத்து இதுவேயாம் என்று உணர்த்துவதற்காகவே 'திங்கள்' என்று கூறினர்.

உத்தரகாரணம் சிவராத்திரி பூஜாவிதிப் படலத்தில்,

“மாகபால்குனயோ: க்ருஷ்ணசதுர்த்தச்யாம் ஸுபேதினே
சௌரமாஸேஷ்வபி தம் குர்யாத் சாந்த்ரமானேன காரயேத”

(சௌரசாந்திர மாதங்களாகிய) மாசி பங்குனிகளில் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி விரதத்தை மாகசௌரமாதத்தில் அநுஷ்டிக்கத்தக்கது. பால்குன சாந்திரம் தகாதது” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இச்சுலோகம் எல்லா விரதங்களையும் சௌரமானத்திலேயே செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. சிவராத்திரியை நிர்ணயிக்க இவ்வாக்கியத்தின் முற்பாதியை மறைத்துவிட்டு, பிற்பாதியை எடுத்து எழுதி 'சௌரமானத்தில் விரதம் செய்யத்தகுந்தது சாந்திரமானம் தகாதது' என்று பொருளும் யாதோர் இயைபுமின்றி எழுதி, பிள்ளையார் சதுர்த்திக்குப் பிரமாணமாகக் காட்டிவிட்டார்கள். சைவாபிமானிகள் இவர்களது போக்கைப் புரிந்து கொள்வார்களாக. அங்ஙனமாயின் பூர்வகாரணம் மகோத்ஸவ விதிபடலத்தில்,

“சௌரமாஸம் ப்ரசஸ்தம் ஹி சாந்த்ரமாஸோப்ரசஸ்தகம்”

சௌரமாஸமே மேலானது, சாந்திரமாசம் அற்பமானது. என்றுவரும் சுலோகத்தைப் பிரமாணமாகக் காட்டியுள்ளார்களெனின், இச்சுலோகம் மகோற்சவங்களின் பேதங்களைப்பற்றிக் கூறியதேயன்றி, சதுர்த்தியையாவது நவராத்திரியையாவது கூறவில்லை. உத்தரகாரணம் மகோற்சவ விதிப்படலம் ௪௨-வது சுலோகமுதல் படித்துப்பார்த்தால் நன்கு விளங்கும். ஆதலால், இச்சுலோகத்தை நவராத்திரிக்கும் சதுர்த்திக்கும் பிரமாணமாகக் கொண்டது சிறிதும் பொருந்தாது. மேலும் அவர்கள் நவராத்திரிக்குப் பிரமாணமாக எடுத்துள்ள,

“சௌரமானே கர்த்தவ்யா நவராத்திர்விசேஷத:
சாந்த்ரமானே நகர்த்தவ்யா க்ருதஞ்சேத் ராஷ்ட்ரநாசனம்”

என்னும் சுலோகமொன்றைச் சதுர்த்திக்குப் பிரமாணமாக எழுதியிருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் ஆவணியீ பாத்திரபதம் வரவிட்டால் பாத்திரபதத்திலே சதுர்த்தியு ற்சவம் செய்வது சாத்திர சம்மதமாகும் என்பது பெறப்பட்டது.

சை. சி. சங்கத்தின் சார்பாகக் கொத்த மங்கலம் வே. நாராயண கௌபாடிகள் என்பார் ஒருவர் 7-8-36 இல் வெளியிட்ட 'சௌரமானமும் சாந்திரமானமும்' என்னும் பிரசுரமொன்றில் சில சுலோகங்கள் காணப்படுகின்றன. அச்சுலோகங்கள,

"விருதாநி சோற்சவான் சர்வான்சௌமேனை வதுகாரயேத்
யதிசாந்த்ரேணகுர்வீதம் மகத்பாபம் ஸமச்நுதே
விருதாநி தேவகர்மாணி திராவிடே சௌரமாசமேத்
கர்ணாடகாதி தேசேஷு ததாசாந்திரமா சேனவா"

என்பன. அவை ஏட்டுப்பிரதி சகலாகமசாரசங்கிரகம் சிவராத்திரி நிர்ணயப் பிரகரண''த்தில் உள்ளனவாம். நீர்வேலி ஸ்ரீமத். சங்கரபண்டிதர் பரிசோதித்தெழுதிய சகலாகம சாரசங்கிரகம் ஏட்டுப்பிரதியும் எம்மிடமிருக்கிறது. அதிலும் ஆராய்ந்தோம். சுலோகங்கள் காணப்படவில்லை. சகலாகம ஸாரசங்கிரகம் அச்சுப்புத்தகத்திலும் ஏட்டுப் பிரதியிலும் போசனவிதியுடன் நூல் சமாப்தியாகிறது. சிவராத்திரி நிர்ணயப் பிரகரணமென்று ஒரு படலம் அந்நூலில் இல்லை. அவர்கள் புதிதாகச் சிருட்டிக்கும் சுலோகங்களை ஏட்டுப்பிரதியில் இருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். பழைய ஏட்டுப் பிரதிகளை எடுத்துப் பார்த்தால் அவைகளில் அகப்படுவதேயில்லை. அவர்கள் சொல்லுவது உண்மைதானா? சைவசமயாபிமானிகளே, அவர்கள்சூட்சியை அறிந்து கொள்ளுங்கள்.

சை. சி. சங்கத்தார் "முருகப்பெருமான் சூரபன்மனை அழித்ததினம் ஐப்பசிமாதத்திய வளர்பிறைச் சட்டியாம். இதனையே கந்தபுராணம் கந்தவிரதப்படலத்தில்(செய்யுள்20)

வெற்பொடு மவுணன்தன்னை வீட்டியதனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப்போற்றி அமரரும் முனிவர் யாரும்

சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல ஆதியாக மூவிருவைகல் நோற்றார்

என்று கூறுகின்றது'' என்று வரைந்துள்ளார்கள்.

இந்தச் செய்யுளில் தேவர்களும் முனிவர்களும் சுப்பிரமணியக் கடவுளைத் துதித்து ஐப்பசி மாதத்திலே பூருவபக்கப் பிரதமைமுதல சட்டியந்தமான ஆறுநாட்களில சட்டி விரதத்தையனுட்டித்தார்கள் என்று சொல்லப்பட்டதேயன்றி, சுப்பிரமணியக் கடவுள் சூரனைச் சம்மாரஞ் செய்ததினம் ஐப்பசிமீ பூருவபக்கச் சட்டியிலென்றாவது, புரட்டாதிப் பிரதமையில் ஆரம்பித்து, ஐப்பசிமீ சட்டியை அந்தமாகக் கொள்ளவேண்டுமென்றாவது சொல்லப்படவில்லை. இதைக்கவனியாது தாம் நியமித்ததைை வலியுறுத்துதற்காக, கௌசிகப் பிரஸ்நகுமாரதந்திரத்தில் இருந்தெடுத்ததாகச் சில சுலோகங்களை யுண்டாக்கிப் பிரசாரம் செய்தனர் அவைகளைக் கண்டவுடன் அநேக ஏடுகளை ஆராய்ந்துபார்த்தோம். அச்சுப்புத்தகத்தையும் ஆராய்ந்து பார்த்தோம். அச்சுலோகங்கள் காணப்படவில்லை. கந்தசட்டி விரதம் ஆ[illegible]சுத்தப பிரதமையிற் றொடங்கி, சட்டியில் முடிப்பதே சுருதி யுக்தி அனுபவங்களுக்கு மாறாகாதது. ஆனால், ஆறுநாளுத்ஸவம் திதிக்ஷயவிருத்திக்கேற்ப, சில வருடங்களில் ஐந்துநாளாகவும் ஏழுநாளாகவும் முடிகிறது. ஆகையால் கந்தபுராணத்திற் கூறிய துலாமாத பூர்வபக்கப் பிரதமையும், கிருத்திகாசுத்தப் பிரதமையும் ஒன்றாய் இருத்தலின், கார்த்திகைமீ ஐந்தாந்திகதி கந்தசட்டி விரதத்தைக் கொள்வதுவே சாஸ்திர சம்மதமாம.



மானாமதுரை

பிரம்மஸ்ரீ தெய்வசிகாமணிப்பட்டர் அவர்கள்

கடிதமொன்றில்

பின்வருமாறு பிரமாணசகிதம் எழுதுகின்றார்:

இவ்விடத்திலுள்ள பஞ்சாங்கங்களில் விநாயகசதுர்த்தி நவராத்திரி ஸ்கந்தஷஷ்டி உத்ஸவாதிகள் மலமாஸதோஷத்தால் பின்னால்தான் செய்யவேணு”மென்று வரைந்திருக்கிறது. தேவாலயங்களுக்கெல்லாம் சௌரமானந்தான் பிரசஸ்தம். மாசநக்ஷத்திரத்தையே தீர்த்தமாகவைத்து நடக்கிற உத்ஸவாதிகளுக்கு இந்த சௌரமேதவிர, மற்றை உத்ஸவங்களுக்கில்லை. தீர்த்த நக்ஷத்திரத்தைப் பிரதானமாக வைத்து நடக்கிற உத்ஸவத்துக்கு முதல்மாதத்தில் ஆரம்பம் வந்துவிடும் (சித்திரைமீ உத்ஸவத்துக்கு பங்குனிமீ ஆரம்பம் வந்துவிடும். அது சாஸ்திர விரோதமென்று சொல்லமுடியாது. நக்ஷத்திரம் விருத்திக்ஷயத்துக்குத் தகுந்தபடி அவ்விதம் தான் வரும். அதேமாதிரி விநாயகசதுர்த்தி, நவராத்திரி, ஸ்கந்தஷஷ்டி முதலான உத்ஸவங்கள் திதியைப் பிரதானமாகவுள்ள உத்ஸவங்கள். மற்ற சில உத்ஸவங்களுக்குச் சமமாக இதைச் சொல்லமுடியாது. சிவோத்ஸவங்களுக்கெல்லாம் தீர்த்தத்தை நிச்சயம் செய்துகொண்டு, ஆரம்பத்தைச் செய்யவேண்டும். இந்த உத்ஸவங்களுக்கு ஆரம்பம் முக்கியமென்று வாக்கியங்கள் மூலம் வெளியாகிறது. அதினால் ஒன்பதுநாள் உத்ஸவம் சில வருஷங்களில் திதி விருத்திக்ஷயத்துக்குத் தகுந்தபடி எட்டு நாளாகவும் ஆகின்றது. மேற்படி காரணங்களினால் நவராத்திரி இவ்விடங்களெல்லாம் பின்னால்தான் நடக்கப் போகிறது.



அன்பர்களே!

இதுகாறும் நாம் எழுதியவற்றால் சூரியனைப்போலவே சந்திரனும் மகத்துவம் மிக்கவன் என்பதும், சௌரமாசம் போலவே சாந்திரமாசமும் சைவர்களாற் கொள்ளத்தக்கது என்பதும் மலமாசத்தைச் சிலகருமங்களில் நீக்குதல் துணிபாம் என்பதும், சைவப் பஞ்சாங்கத்தில் இவ்வருடம் நவராத்திரி, சதுர்த்தி, கந்தசட்டி விரதங்களை நிர்ணயம் செய்தது சைவ சாத்திரங்கட்கும், ஆன்றோர் கொள்கைக்கும் முரணானதென்பதும், மற்றைய பஞ்சாங்ககாரர்கள் நிர்ணயித்ததே சாத்திர சம்மதமானதென்பதும் பிறவும் பசுமரத்தாணிபோற் பதித்து நாட்டப்பட்டன.


நம் சைவசமயிகள் சைவாகம முறைப்படி விரதாதிகளை யனுட்டித்து, சைவ உலகிற் பரவியோங்கி, சைவசமய பரிபாலனஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ சங்கரபண்டிதர் முதலிய பெரியோர்கள் வகுத்த வழியிலே ஒழுகிவருமாறு அனுக்கிரகிக்கும்படி சிவபெருமானைக் காயத்தாலும், வாக்காலும், மனத்தாலும் வணங்கி வாழ்த்தித் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்

ச. குமாரஸ்வாமிக் குருக்கள்
மாவிட்டபுரம்.

தாதுவருஷ
பரட்டாசிமீ

ச. குமாரசுவாமிக் குருக்கள்
அச்சுவேலி.



கௌரிமாயூ[ர]
சங்கிரகம்

இஃது
திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை
ஆதீனம் மகா வித்வான்
ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்
குமாரர்
கனம் சிதம்பரம் பிள்ளையவர்கள்
வேண்டுகோளின்படி
மேற்படி ஆதீனம் மகாவித்துவசிரோன்மணியாகிய
ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்
மாணாக்கரும்
நெய்க்குப்பை
மகா-ள-ள-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள்
குமாரருமாகிய
குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள்
செய்தது

இவ்வாசிரியர் தமயன் குமாரர்
கோ. சண்முகம்பிள்ளை
[illegible] வழங்கும்
சிதம்பரம் பிள்ளையால்
பப்ளிஷ் செய்யப்பட்டது.



THE "SARASVATHI VILAS PRESS," MAYAVARAM

உ

பரமபதி துணை.

ஸ்ரீ

ஞானசம்பந்த குருவேநம:

கௌரிமாயூரமான்ய தாற்பரிய

சங்கிரகம்

இவை

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறையாதீனம்

மகாவித்வான்

ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள

குமாரர்

கனம் சிதம்பரம் பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

ஷை ஆதீனம் மகாவித்துவ சிரோன்மணியாகிய

ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்

மாணாக்கரும்

நெய்க்குப்பை

மகா-ா-ாஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள்

குமாரருமாகிய

குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள்

செய்தது

இந்நூலாசிரியர் தமயன் குமாரர்

கே. சண்முகம்பிள்ளை

எ[illegible] வழங்கும்

சிதம்பரம் பிள்ளையால்

பப்ளிஷ் செய்யப்பட்டது.

PRINTED BY

R. Venkatrama Iyer,

"Sarasvathy Vilas Press"

Mayavaram..

1910.

உ

சிவமயம்.




இந்நூல்

மாட்சிமைதங்கிய பல ஞானகனவந்தர்களுடைய

தருமப் பொருளுதவியால்

அச்சியற்றப்பட்டது.



உ

பரமபதி துணை

ஸ்ரீ

ஞான சம்பந்தகுருவே நம:

சௌரி மாயூரமான்மிய தாற்பரிய

சங்கிரகம்

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

விநாயகக் கடவுள் துதி.

பூமேவுதன்னடியார்தமை விளக்கி முத்திருக்கைப் [புணர்த்தவல்ல
தேமேவுபெருங்கருணை யாளனென வெரிப்ப மறைத் [திருநாமங்கள்
பாமேவு பலவிருக்க வதத்தியமால் களிறெனும் பேர் [பரித்து நாளு
மாமேவு மயிலாடுதுறைத்தளிவாழ் பெருமானை [வணக்கஞ்செய்வாம்

புண்ணிய பூமியாகிய பரதகண்டமெனப்படும் இந்த தேசத்தில் தேவாலயங்கள் பற்பலவுள்ளன தேவாலயமென்பது தெய்வம் வீற்றிருக்கும் கோயில். தெய்வம் அங்கிங்கென

எங்கும் வியாபியாய் நிறைந்து நிற்கும் பரமாத்மா வாதலால், அத்தெய்வத்தினை, ஏகதேசியாகக்கண்டு வழிபாடு செய்தல் யாதுக்கெனபர்சிலர்; அவர் அறியார்; ஏகதேசசரீரத்தில் வசிக்கும் ஜீவாத்மாக்களாகிய மானிடர் ஏகதேச அறிவும், ஏகதேசவியாபாரமும் உடையராதலால், பிரமப்பொருளாகிய தெய்வம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்து நிற்கும், அந்நிலையின் உண்மையை உள்ளபடி அறிந்து வியாபக அறிவு வழிபாடு செய்தல் அம்மாந்தர்க்கு இயல்பான சுலபகாரியமாகமாட்டாது. ஆதலால், அச்சபிரமத்தெய்வ வழிபாட்டினைச்செய்யும் ஞானவழியினைக் கிரமமாகவே அவரவர்களும் அடைதற்குரிய சோபதே முறையாம். இந்த முறை, சுருதி, யுக்தி, அநுபவம், மூன்றிற்கும், முழுதும் ஏற்கும் முறைமையேயாம்.

இவற்றுள் இத்தென்னாடானது, சிதம்பரம், சீர்காழி, புள்ளிருக்குவேளூர், மாயூரம், திருவுத்தரகோசமங்கை, திருவிராமேச்சுர முதலிய அநேகதிவ்ய வைதிக சைவ ஸ்தலங்களைத்தன்னிடத்துப் பொருந்தக் கொண்டிருத்தலானும்; ஆளுடைய பிள்ளையார் முதலிய சைவபரமாசாரிய சுவாமிகள், நால்வரும், மற்றும் பல நாயன்மார்களும், திருவவதாரஞ் செய்து, பரமேச்சுவரன் திருவருட்பிரசாதம் நிலையிட்டு விளக்கி அநுக்கிரகஞ் செய்தற்குரிய சிறத்தலானும், மற்றை நாடுகளைக் காட்டினும், மிகமேலாய் விளக்கமுறுவதொரு நன்னாடாம்,

இந்நன்னாட்டில், புண்ணிய தீர்த்தங்கள் அநேகம் அமைந்ததாயும், வேதபாராயணஞ் செய்கின்ற சற்பிராமணர்களும், வேதாகமசாஸ்திரங்களில் வல்ல ஆதி சைவர்களும், தமிழ்வேதபாராயணஞ் செய்கின்ற தேசிகர்களும், ஆரிய திராவிட ஆங்கிலேய பாஷைகளில் வல்லவர்களாகிய வித்வசிரோமணிகளும் கலத்தின்கண் வழுவாத நடைமையிற் குடிநாட்டபண்பிலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலையுடைய சைவவேளாளர்களும், அநேக இரத்தினதிகள் முதலிய பற்பல வியாபாரஞ் செய்கின்றவணிகர்களும், விக்கிரகங்களைச்செய்யக்கூடியவிசுவகன்மகுலத்தினர்களும், சங்கீதமேளவாத்தியங்கள் வாசிப்பதில் தேர்ந்த வித்வான்களும், ஆடல்பாடலுக்குரிய பணிப்பெண்களும், இன்னும் அநேகர்களும், வசிக்கின்ற ஒவ்வொரு மகாவீதிகளும் தென்னை, கமுகு வாழைகளாலும், மிகஅலங்காரங்களமைந்த இந்த க்ஷேத்திரமானது, கற்பகால ஆதியில், சந்தனம், அகில், குக்கில், வேங்கை, அசோகு, தென்னை, மா, முதலிய அநேக விருக்ஷங்களாலும், மல்லிகை, முல்லை, செண்பகம், முதலிய வாசனை மலர்கள் அமைந்த இன்னும் அநேக செடிகளாலும் நிறையப்பெற்ற ஆரணியமாயுள்ளது.

சிவபெருமானுடைய கிருபையினால் விஷ்ணுமூர்த்தியின் உந்திக்கமலத்தில் பிரமதேவன் தோன்றி, அவரை நோக்கி நமஸ்கரித்து எழுந்துநின்று என்னை யுண்டுபண்ணினது என்னகாரணமென்று வினவ; அவரதற்கிரங்கி, நாமும், நீரும் வணங்குதற்குரிய மூன்று நேத்திரங்களையுடைய மினைஞர் செஞ்சடை அண்ணலாரைக் குறித்து அருந்தவம்புரிந்து, சிருஷ்டித்தொழிலதனைச்செய்வதற்கு, அனுக்கிரகம் பெறுவாய் என்று திருவாக்களித்தார். அவ்வுத்தரவைப்பெற்று அம்சந்தோஷமுடையவராய் எவ்விடம் அவ்விததவம் புரிதற்கு இசைந்ததென யோசிப்பாராயினர், அப்போது உண்டாகிய அசரீரி திருவாக்கின்படி பொன்னிநதியில் ஸ்நானம பண்ணி நித்யகடன்களை முடித்துக்கொண்டு மேற்கரிய ஆரண்யத்துள், பரிசுத்தமான இடத்திலே சுகாசனத்திலிருந்து. நேராகிய கழுத்துத்தலை உடம்புகளை உடையவராய்; அதிதியாச்சிரமத்தராய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, பத்தியால், இருதயபுண்டரீகத்தைத்துகளறசுத்தமாக்கி, அதன்மத்தியிலே; தெளிவுடையவராய் சோகமில்லாதவராய் எண்ணப்படாதவராய் வெளிப்படாதவராய்; அநந்தரூபராய், சிவனாய், அமிர்தராய். பிரமயோனியாய், தத்பதமாய், ஆதிமத்தியாந்த விகீனராய், ஏகராய், விபுவாய், சிதாநந்தரூபியாய், அரூபராய், அற்புதராய், உமாசகாயராய். பரமேசுவரராய் பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய். பூதயோனியாய், சமஸ்த சாக்ஷியாய், இருப்பவரைத்தியானித்து. வெய்யில், மழை, பனி ஒன்றுந்தோன்றாதவராய், பல்லாயிரவருடம் தவமியற்றுவாராயினார்.

அத்தவத்திற்கிரங்கி கங்கையும், மூன்றாம்பிறைச்சந்திரனையும், தரித்தபொன்மயமான சடையையுடையவராய், நம்பெருமான் அம்பிகைசமேதராய்; நந்திதேவர் முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், முன்னும்பின்னும், சூழ்ந்துவர அநேகவாத்தியங்கள்முழங்க தெரிசனங்கொடுத்தருளினார். பிரமதேவரானவர், திடுக்கிட்டு, நடுநடுங்கி தவத்தை விட்டெழுந்து அஷ்டாங்க நமஸ்காரம்புரிந்து, சிரமீது குவித்தகையுடையவராய், அநேக பிரதக்ஷிணஞ் செய்து சந்நிதானத்தில் நின்று, விரிகலையுலகின் விளைவே, அருமையிலெளிய அழகே, அருமுகிலாகிய கண்ணே என்று பற்பலவிதமாய்த்தோத்திரம் பண்ணினார்.

கடவுளானவர்; பிரமதேவனை சமீபத்திலழைத்து, தம் திருக்கரங்களால் தடவிக்கொடுத்து, உமக்கு யாதுவேண்டுமென வினவினார்; எம்பெருமானை கிருபையாளித்து சிருஷ்டித்தொழிலதனைச்செய்யும்படி உத்திரவளிக்கவேண்டுமெனப்பிரார்த்தித்தனர். அதற்கிரங்கி இவ்விடத்திலுள்ள (பா) விருக்ஷத்தின் கீழ்நம், சகளநிஷ்கள திருமேனியாயும் சுயம்புவாயுமுள்ள சிவலிங்கத்திருவு

ருணை இதன் தென்பக்கலில் ஓர் தீர்த்தம் உண்டுபண்ணி அதில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, பூசைபுரிந்து நீர்வேண்டிய வரங்களையடையக்கடவதென்றும், இந்த க்ஷேத்திரமும், தீர்த்தமும், இலிங்கமும், உம்முடைய பெயரினால் விளங்கக்கடவதென்றும் இவ்வாரண்யம் நன்றாகி பொன்மயமான மாளிகையாய்ப்பார்க்கக்கடவீரென்றும், திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

பிரமதேவனானவர், அவ்விதம் தீர்த்தம் ஏற்படுத்தி, விதிப்படி ஸ்நானஞ்செய்து அநேகநாள் சிவலிங்கப் பெருமானை அபிஷேக அலங்கார நைவேத்திய தூபதீப ஆராதனைபுரிந்து பற்பல தோத்திரஞ்செய்வாராயினர். அவ்விதஞ்செய்கின்ற காலத்து, சர்வலோகநாதனாகிய கடவுள் கிருபாகடாக்ஷமாய் இடபாரூடராய்த் தோன்ற பிரமதேவனானவர், பலமுறை நமஸ்கரித்து சிரமேற் குவித்த கையுடையவராய் நின்று ஐயனே, அடியேனுக்கு முன் கட்டளையிட்டவண்ணம் சிருஷ்டித்தொழில்தனை செய்யும்படி உத்தரவாக வேண்டுமெனப்பிரார்த்தித்தனர். கடவுளானவர் அவ்விதம் அனுக்கிரகம் புரிந்து இவ்வாரண்யம் பிரமபுரமென்றும், இத்தீர்த்தம் பிரமதீர்த்தமென்றும், இச்சிவலிங்கம் பிரமபுரீஸ்வரரென்றும், எக்காலமும் வழங்கும்படி கட்டளையிட்டு அவ்விலிங்கத்தின்கண் மறைந்தருளினர். பிரமதேவனானவர் அவ்வருமையான வரங்களைப்பெற்று முன் கற்பங்களில் சிருஷ்டித்தொழில் எவ்விதம் நடந்திருக்கின்றதோ, அவ்விதமே செய்யத்தொடங்கியவற்றையும், தம் ஒருவரால் நடத்த முடியாதென்ற எண்ணமுடையவராய், மனோ சங்கற்பத்தினால், பிருகு, புலத்தியன், புலகன், தக்கன், முதலிய ஒன்பது புதல்வர்களைப்பெற்று அவர்களையும் அத்தொழிலை நடத்தும்படி செய்தனர்; அதில் தக்கன் நற்றவங்களைச்செய்து அநேக புத்திரர்களையடைந்து அவர்களையும் அத்தொழில்தனை நடத்தும்படி பணித்தனன். இவ்விதம் சிருஷ்டித்தொழில் நடந்துவருகின்ற காலத்தில்; தக்கனுடைய பிள்ளைகட்கும், நாரதமகரிஷிக்கும், உண்டாகிய நட்பினால் அந்நாரதமகரிஷி அப்பிள்ளைகளைப்பார்த்து நீங்கள் செய்து வருகின்ற தொழிலானது பந்தத்தின் மேல் பந்தத்தை விளைவிப்பதேயன்றி என்ன சுகத்தையடைவீர்களென்று இகழ்ந்து பேசினர். அப்பிள்ளைகள் வேறு நாங்கள் யாது செயக்கடவதென்று விசாரித்தனர். நீங்கள் பிரமபுரமாகிய ஆரண்யத்தையடைந்து அங்குள்ள பிரமதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம்பண்ணி பிரமபுரீஸ்வரரைப்பூசை செயக்கடவதென்று ஆஞ்ஞாபித்தனர். அப்பிள்ளைகள் அவ்விதமே செய்ததனால் மோட்சமடைந்தனர்கள். தக்கன் மக்களுடைய பிரிவாற்றாமையால் மனம் நொந்து நாரதமகரிஷியோடு பற்பல வார்த்தைகள் கூறி இருவர்களுங் கொடுஞ்சாபமிட்டுக்கொண்டார்கள். அதன் பின் தக்கன் அதிக மாதவஞ்

செய்து அநேக புத்திரிகளைப் பெற்ற பேறோடு இவ்வுலகமெல்லா
மீன்ற அன்னையாகிய இமோற்பாவத இராசகுமாரியையும் மகவா
கப்பெற்று, எல்லாம் வல்ல இயர்கைக் கடவுளின் கரமேறும்
தன் கரம் மேலுமாகக் கன்னிகாதானம் செய்வித்தலாகிய பெரும்
பாக்கியத்தையும் அடைந்தான். அவ்விதம் அடைந்த செருக்கினால்
யாவர்களையும் மதியாது, தாம் மனம் போனவாறு நடந்து
கொண்டிருக்குங்காலத்தில், இவ்வொரு மகாயாகஞ் செய்ய
எண்ணி, ஆரண்யமயிருந்த திருச்செம்பொன் பள்ளியின் சார்
பிலுள்ளத் திருப்பறியலில், யாக குண்டமண்டலம், வேதிகை
களும், மற்றும் அதற்குவேண்டிய பாகசாலை, வந்தவர்கள் தங்கு
தற்குரிய விசாலமான பற்பல விடங்களும், அமைக்கும்படிச்
செய்வித்து, பிரமன், விஷ்ணு, இந்திரன், முதலாகிய
தேவர்களிருக்குமிடங்கட்குத்தாம் நேரில் சென்று தன்
னால் செய்யும்மகாயாகத்தை நிறைவேற்றிவைக்கும்படி வினய
விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு தம் முக்கிய மரு
மகனாராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கைலயங்கிரி
யில் முறைப்படி நந்திதேவரிடத்திலறிவியாது உள்ளே புகுந்த
னன். அந்தச்சமயம், ஐயனும், அம்மையும், ஒருவர்க்கொருவர்
அன்புகாட்டியிருக்கின்ற நேரமாதலால், இவர் வரவை நோக்காத
வர்களானார்கள். அதனால் தக்கன், மருமகனாராகிய மாதேவன்
தம்மைக் கண்டெழுந்திருந்து அஞ்சலி முதலானதுஞ் செய்ய
வில்லை என்ற கோபத்தினால் வந்த காரியமொன்றுந்தெரியாது,
எல்லாமென்மகளினால் வந்த வாழ்வல்லவோ வென்று பற்பல
இழிவான வார்த்தைகள் கூறி தம்மிடஞ்சென்று எண்ணிய வண்
ணம் மகாயாகஞ்செய்யமுயன்றனன். நீலகண்டனை விரிசடைக்கட
வுள், தம்மையும் உலகிலுள்ள சாமான்யமானுடரைப்போலெண்ணி
தெரிவியாது வந்தகுற்றத்திற்காக, புன்முறுவல்செய்து, இவன்
பூமியில் தெய்வீகராஜனென்னும் மானுடனாய்ப் பிறக்கும்படி
சபித்தனர். அம்மையானவள் விதிர் விதிர்த்து சிம்மாசனத்தி
னின்று மெழுந்திருந்து பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி ஐயனே
அரசே, ஆனந்தக்கனியே, என்றுபற்பல தோத்திரஞ்செய்து என்
தகப்பன் என்னிடத்துள்ள அன்புமுதிர்ச்சியினாலொன்றுந்தோன்
றாமல், முன்னர் அறிவியாது வந்தகுற்றத்திற்காக இவ்விதம்
கட்டளையிட்டால் நான் என் செயக்கடவேனென்று தம்மைத்தா
மே நொந்து துன் புறுவாளாயினள். கடவுளானவர் கோபக்
குறிப்பினால் பின் நடக்குந்திருவிளையாட்டுக்குத்தக்க வண்ணம்
தோகையே, எனக்கூறி நாம சொன்னவுரை மாறாது, நீ பிரார்த்
தித்துக்கொள்ளுவதினால் இவன் கன்னியர்களுடைய கற்பத்தில்
தோன்றாது அனலிடைத்தோன்றி அளவில்லாத வளப்பங்களையு
டையவனாய்ச் சில நாட்கழித்து இங்குசெல்வானெனப்புகன்றார்,

அவ்வாக்களைப்பெறாது, ஏ, சுவாமின் என் தகப்பன் செய்கின்றயாக சாலைக்குச்சென்று அவர்கட்கு, நற்புத்தி புகட்டி தங்களை அழைத்து வரச்செய்க்கடவேனென்று பலமுறைத்தோத்தரித்தாள்; பசுபதியானவர் நீ அங்கு செல்வாயாகில் எவ்விதத்தாலும் மதிக்கமாட்டானென்ன பல காரணங்களால் போதித்தனர்; பராசக்தியானவள் மனஞ்சகியாமல் அங்கு செல்லவேண்டிய குறிப்பையறிந்த விதமாய்க் கட்டினாள் அக்குறிப்பை நோக்கிச் சென்று வரும்படி திருவாக்களித்தனர்.

உலககாரணியானவளை இரண்டு திருப்பாதங்களும் நோகும்படி ஒருவிதத்துணையுமில்லாமல், அரி, பிரமன் முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், மற்றும் யாவர்களும், நெருங்கியயாகசாலையைச்சார்ந்தனள். பராசக்தியைக்கண்டு ஆங்குள்ள தேவர்களெல்லாம் நடுக்கமுற்று உபசாரங்கள் சொல்ல பெரும்பாதகனாகிய தக்கன் அன்பு பாராட்டி ஒருவித உபசாரமுஞ்சொல்லாதவனாய் விழித்தகண்மூடாத பரமஞானியைப்போல வேடங்காட்டியிருந்தான். உமாதேவியானவளையும் சங்கைத்து தகப்பனுக்குச்செய்யவேண்டிய மரியாதையைச்செய்து, மெய்மறிகண்ணனுக்குத்தோன்றாமல் நடத்துகின்ற காரியங்களைக்குறித்து மனம் நொந்து இகழ்ந்து பேசி பராசக்தியானவள், துன்பசாகரத்திலழுந்தி ஒன்றுந்தோன்றாது நிற்கின்ற போது அவ்வாரண்யத்துள்; ஓர் புட்பச்செடியின் மீதிருந்த மகாஅழகுவாய்ந்த மயிலானது அம்"பாளுடைய முகத்தைப்பார்த்து தம்மினமென்று கருதி, சிறகுகளை விரித்துநடனஞ் செய்தது அப்பமயமென்று கூறி அம்பிகையினுடைய திருவடியின் கண் வீழ்ந்தது அம்மையானவள் தம் கரங்களால் தடவிக்கொடுத்து அஞ்சலை என்று திருவாக்களித்து பாதகனாகிய தக்கன் செய்த கொடுமையை எண்ணி அவனைப்பார்த்து, நீ, வளர்த்த ஸ்தூலசரீரத்தை, இவ்வியாகசாலையில் நீருக்கு உன்யாகசாலையைப்பெய்வாழுஞ் சுடலையாக்குகின்றேனென்று சொல்லி யோகாக்கினியை உண்டுபண்ணி, நாம் சொல்லிய வண்ணம் முடித்தனள். பிரமன், அரி, இந்திரன், முதலாகிய தேவர்கள் எல்லாரும் நடுக்கமுற்று இனி யாதுவிளையுமோவென அச்சமடைந்து பெருந்துன்பக்கடலில் அழுந்தினார்கள் இதைப்பார்த்த நாரதமகரிஷியானவர் கையிலிருந்த வீணை விழுகினதுந்தெரியாமல் சடையை விரித்துக்கொண்டு கைலயங்கிரியிலுள்ள கபாலமூர்த்தியின் சந்நிதானத்தில் சென்று அலறியழுது இங்கே நடந்த வைபவங்களையறிவிக்க, அவைகளைக் கேட்டவுடன் கோபாவேசமுண்டாகி, தன் திருச்சடையிலொன்றையெடுத்தோங்கியறைந்தனர்." அதினின்றும் அகோரவீரபத்திரர்தோன்றி ஐயனே, எனையுண்டுபண்ணிய காரணம் யாதென்று கேட்க; திருச்செம்பொன்பள்ளியின் சார்பில தக்கன் செய்கின்ற

யாகத்தையும், அங்குள்ளவர்களையும் அழித்துவரக்கடவை
யென்று கட்டளையிட்டனர். அப்பிரகாசபரம்பிதாவே அடி
யேன் சென்று அக்கட்டளையின்படியே செய்து வருகின்றே
னென விடைபெற்றுக்கொண்டு அதிக கோர ரூபமுடையவராய்
அக்கினிப்பொறிகள் சிதறும் கண்ணாம் அந்தயாகசாலைக்குச்
சமீபத்தில் வந்து நான்கு வாயில்களுக்கும் காவல்கள் வைத்து
உள்ளேசென்று தக்கனை நோக்கி நமக்காகிலும் கொஞ்சம்
அவிர்பாகங் கொடுப்பீரோவென்று பரிகாசம் பண்ணினர்.
பின் விளைவு தேருத தக்கன் அக்காலத்திலும் சூலபாணியாகிய
கடவுளைப்பலவாறு நிந்தித்தான். அந்நிந்தனையைக்கேட்டுப் பெரு
நகைசெய்து, யாகசாலையையும், அங்குள்ளவர்களையும் தாமெண்
ணியபடி முடித்து கைலபங்கிரிக்கு நடைக்கடலாகிய அண்ணலா
ரைத்தியானம் பண்ணுவாராயினர். அவ்வண்ணலார், இடபவா
கனத்தின் மீது பறபல விருதுகள் முன்செல மேளவாத்தியங்
கள் முழங்க, யாகசாலையின்கண் எழுந்தருளினர். அவ்வீர
பத்திரர், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலி செய்துகொ
ண்டு நிற்பாராயினர். அவ்விடத்தில் கடந்திருக்கும் ஆச்சரியங்
களைக்கண்டு மனமுருகிய அ இவ்விடத்திறந்தவர்களையும்
எழுப்புகவென்று கட்டளையிட்டனர். அவ்வண்ணமே யாவர்
களுமெழும்புகவென்று திருவாக்களித்தார், சிவபிரான் பூதல்வர்
புரந்தரன்மால், அயன்முதலிய தேவர்களும், மற்றும் யாவர்
களும், நித்திரைவிட்டெழுபவர் போலெழுந்து மங்களகரத்தி
னால் வாழ்வு கட்டிடமென நினைந்து சரீரங்களெல்லாம் வியர்
த்து நடுநடுங்கி மனம்வெதும்பி கண்களில் நீர்ததும்பி சிரமீது
கைகுவித்தவர்களாய் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்தவர்க
ளாக இருந்தார்கள். எவர்களாகிலும் சிரசின்கண் கைகுவிப்பார்
களாயின் அவர்களை ஓங்குவிப்பாராகிய செல்வரானவர் அவர்
கள் குறிப்பையறிந்து யாவர்களுமெழுந்திருங்களென்று திரு
வாய்மலர்ந்து மேற்சொன்ன தேவர்களை நோக்கி இந்தயாகத்தில்
நமக்கு இப்போதாகிலும் அவிர்ப்பாகங் கொடுப்பீர்களோவென்று
கேட்டருளினர், அவர்கள்,

"அடியமேமெந்த ஞானறு மாணவ்மலக்கோட்பட்டுக்
குடிகெடுக்கின்றோரீயிங் கிரங்த போலாட்டு விப்பாய்
செடியுடலேழை யெங்கள் செப்பிழை பொறுத்தாட்கொள்ளும்
படியிரந்திரந்து விண்ணப்பம் செய்வேம் பிறிதென்செய்வேம்"

என்று இன்னும் அநேகதோத்திரங்கள் செய்து அடியெங்கள்
திருப்பாற்கடல கடைந்தபோது உண்டாகியவிஷத்தை அமிர்த
மாகக்கொண்டு இரட்சித்ததுபோல் இக்காலத்திலும் காப்பாற்ற
வேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள். அதற்கிரங்கி, திருச்செம்பொ

ன்பள்ளி, நனிப்பள்ளி, திருப்பறியலூர் க்ஷேத்திரங்களில், பற்பலவழிபாடுசெய்து விதிப்படி பூசைபுரிந்து அக்குற்றத்தை நிவர்த்தித்துக் கொள்ளுங்களென்று திருவாக்களித்து, சூக்ஷும சரீரத்தோடு சமீபத்தில் நிற்கின்ற கௌரியை நோக்கி இந்தயாக சாலையில், நீ, அதிஅன்பமாயிருக்கின்றபோ தூமயிலானது உன்னை சரணாகதியடைந்தமையால், நீயும், அம்மயில் வடிவாகி நாமெழுந்தருளியிருக்கின்ற பிரமபுரமாகிய ஆரண்யத்தில் சென்று நம்மை அர்ச்சிப்பாயாயின் நாமும் மயிலாகி உன்னையாதரித்து வருகின்றோம் சிலநாளானபின் முன்போல் நம்மையடைவாயென்று ஆக்ஞாபித்தருளினார். அத்திருவாக்கைக் கேட்டு நல்லறம் வளர்த்த செல்வியானவள் எல்லாவுலகங்களையும் முடிசூற்றி [illegible] நொச்சியிலைபோன்ற பைந்தாள் புதளி [illegible] பூவை [illegible] மயிலுருக்கொண்டனள்; அ [illegible] வமைந்தனர்கள். இவ்வற்புதக் [illegible] இந்திராணி, முதலிய மாதுமுன்னி [illegible] இவ்வருமையான திருவுருவெடுத்துக்கொண்டு பிரமபுரமாகிய ஆரண்யத்தில் உலாவிசஞ்சரிக்கிறார்கள்; இவர்கட்கு எவ்வித இடையூறும் வாராமல் ஆறுகுந்தன முதலிய தேவர்கள் பாதுகாப்பாயினார்கள்.

இம்மயில்கள் கூட்டத்தோடு கண்ணாடிபோன்ற பொன்மயமான கலாபங்களை விரித்து [illegible] பதைசரணன்மக்ளின்,

"மாயைதனையுதறி வல்வினையைச் சுட்டு மலஞ்
சாயவமுக்கியருட்டா ளெடுத்து—நேயத்தால்
ஆனந்தவாரிதியிலான் மாவைத்தானழுத்த,

நடனஞ்செய்தருளுகின்ற எம்பெருமான் தாமும் பெரிய அழகவாய்ந்த ஆண்மயிலுருவமைந்து [illegible], தத்திருநடனமாடினார்கள். அத்திருநடனம் [illegible].

"அந்தனன்நடமே தென்னிலந்தெரிதி [illegible]
பந்தமதகற்று மிந்தப்படி வழுவிதுவேயாகும்
இந்துலகத்தில் யாருங்காண் பலரால் வழுவாமுத்தி
தந்தருளளிக்குந்தெய் வத்தலமாகித்தலமேபாகும்; அன்றியும்"

திருவகையிவை கடந்த வியல்புநம் மௌனியாஞான
வுருவமானந்த மானவுயிரியாம் பெயரெமக்குப்
பரபதம் பரமஞானம் பராற்பரமிலது காத்த
திருமலிபிச்சை செய்திதிக்கிடமாகு மன்றே,


என்ற வாக்கியத்தின் வண்ணம் திருநடன மாடவும், சிற்சிலமயில்கள் கலாபங்களை விரித்துக்கொண்டு நிற்கின்றதையும், சிற்சில

மயில்கள், உல்லாசமாய் நடப்பதையும், சிற்சில மயில்கள் ஆங்குள்ள செடிகளில் ஏறி இறங்குவதையும், தெரிசிக்கும் தேவர்களும் மற்றும் யாவர்களும் அடையுமானந்தத்தை, எம்போன்றவரால் சொல்லற்பாற்றன்று? அஃதாவது,

"புளிக்கண்ட வர்க்குப்புன லூறுமப் போற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாந்
துளிக்குங் கண்ணீருடன் சோரு நெஞ்சத்திரு
ளொளிக்கு மானந்த வமுதூறு முள்ளத்தே."

"இனைத்தனையுள்ள தோர் பூவின்றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண் டொறும் பேசுந்தோறும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய்க் கோத்தும்பீ,"

என்னும் [illegible] வேத வாக்கியத்தாலுமறிக, இவ்விதம் அநேகநாள் [illegible] க்கின்றபோது, ஒருநாள் திருமயிலாக [illegible] யுடைய திருச்செவியில் கேட்கும்படி இங்குள்ள [illegible] சிவலிங்கத் திருவுருவை பூசனைபுரிவாய் என்று அசரீரி திருவாக்குண்டாயிற்று; அது கேட்டவுடன் அகிலலோக நாயகியானவள் பெருமானைப் பூசிப்பதற்குரிய, [illegible] நைவேத்திய தூபம், தீபம், முதலாகிய ஆராதனை செய்வதற்கு [illegible] அங்கங்கள் நமக்கு இல்லையே என்று துன்பு [illegible] வ [illegible], பன் முறை மேற் சொன்ன அம்மேடைக [illegible] (முன் போல்) கருகூத்திலேறி கொழுந்து [illegible] பெருமானுடைய திருமேனியில் சுவர்ண [illegible] அழகுபெற அடுக்கடுக்காய்ச்சாற்றி அவ்வ [illegible] வாசனை தங்கிய மலர்களையும், வில்வங்களையும [illegible] இன்னும் பற்பல மயில்களும், கொணர்ந்து முன்னூற்றறுபது வருடம் வரையில் அன்னபூரணியானவள், ஒழிவற நிறைந்த [illegible] மூர்த்தியின் திருமேனிமுழுவதும் தெரியா வண்ணம் அர்ச்சித்து மயில கூட்டங்களோடு பிரதக்கணஞ்செய்து வருவாளாயினும் அதன் பின் ஆண்மயிலுருவமைந்த, பிறைக் கொழுந்தணிப்பெருமான் அம்மயிலுருவம் மறைந்துவிட மயிலம்மையானவள் மஞ்சத்தில் அர்ச்சித்ததினாலுண்டாயது குற்றமுள [illegible]தாலும் முன்பாதகஞான தக்கன செய்தகொடுமையையெண்ணியும், பதியன்னை விட்டுப்பிரிந்ததை யோசித்தும் பலவிதத்துன்பப்பட்டு முன்போல பிரமதீர்த்தத்தில்படிந்து பூசை செய்வாராயினள். அக்காலையில் பிரமபுரீஸ்வரரானவர் இடபாரூடராய் தோன்ற அம்மையானவள் தரிசித்து பலாசினால் பற்பலதோத்திரஞ்செய்யகிருபாநோக்கமுடையவராய் அதுவரையில் நடத்திவந்த



பூசைக்குகந்த; தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி இம்மயிலுருவை நீக்கி எதார்த்தமாகிய திருவுருவத்தையடைந்து வரக்கடவதென்று ஆக்ஞாபித்தனர்: அவ்விதப்படியே எதார்த்ததிருவுருவத்தையடைந்து நமஸ்காரம்புரிந்து தபக்கு வேண்டும் வரங்களை அனுக்கிரகஞ்செய்தருளவேண்டுமெனப்பிரார்த்திப்பளாயினள். அந்தசமயத்தில் தேவர்கள் எல்லோரும் அரகரவென்று முழக்கொலி செய்து புஷ்பங்களை மாரியாக வருஷித்தார்கள்.

"ஐயனே போற்றி போற்றி யழலவிர் மழுமானேந்தும்
கையனே போற்றி போற்றி மையார்கண் காளமேனிச்
செய்யனே போற்றி போற்றி தேவரை காத்தகண்ட
மையனே போற்றி போற்றி யென்றது வருக்கலுற்றாள்"

இவ்விதமாகப்பற்பல தோத்திரஞ்செய்து இந்தக்ஷேத்திரம் இன்றுமுதல் எக்காலமும், பிரமன், விஷ்ணு முதலாகிய தேவர்களாலும், மற்றுமுள்ளவர்களாலும் கௌரிமாயூரமென்றுவழங்கும்படிக்கும், நானிங்கு மாயூரமென்ற திருநாமமுடைய வரையும் யாவர்களாயிருப்பினும் இங்குள்ள புண்ணியதீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ்செய்து இங்கு தெரிசனஞ்செய்பவர்கட்கும் பஞ்சமகாபாதகமுதலிய வெவ்வகைக்குற்றங்களையும் நீக்கி, இம்மையில், போக பாக்கியங்களை வேண்டிய முழுதும் அவற்றையளித்தும் மறுமையில் மோக்ஷசாம்ராஜ்யத்தைக்கொடுத்தும் இவ்வுலகில் ஒவ்வொருவருடங்களிலும் சூரியன் துலாராசியில் வசிக்கின்ற ஐப்பசிமாதத்தில், பொன்னிநதியில் இடபதேவரெழுந்தருளியதீர்த்தகட்டத்தில் ஸ்நானஞ்செய்து நம்மை தெரிசனம் பண்ணுகின்றவர்கட்கு இடபாரூடராய்க்காட்சி கொடுத்து தீர்த்த மகோற்சவம் கொண்டருளும்படிக்கும் இன்னும் அநேக வரங்களையும், சட்டளையிட்டருளவேண்டுமெனப்பிரார்த்தித்தனள். அந்த க்ஷேத்திரத்தில் வசித்திருந்த மற்றமயில்களெல்லாம், அத்தீர்த்தத்தில படிந்து எதார்த்தவுருவத்தையடைந்து பெருமானடியின்கண் பணிந்து அவரவர்கள் இருக்குமிடஞ்சென்றனர்கள்.

சுத்த சுயம்பிரகாச சொரூபியானவர் உமாதேவியார் கேட்டவரங்களையெல்லாம் மிகசந்தோஷமாய்க் கொடுத்து அவ்விலிங்கத்தின்கண் ணமர்ந்தருளினர்.

அக்காலத்தில் முன் தக்கனது வேள்வியில்; அகோரவீரபத்திரக்கடவுளால் அநேக இம்சைகளடைந்து முன் சொன்ன திருப்பறியலூர் முதலிய மூன்று க்ஷேத்திரங்களிலும், விதிப்படி ஆராதனை செய்து இக்கௌரிமாயூரத்தை யடைந்து ஞானமூர்த்தியை அபிடேக அலங்காரதூப, தீபநைவேத்தியம ஆராதனை பண்ணி; அர்ச்சனை புரிந்து, அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து எங்

கள் குற்றங்களை நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள், பின்னும் அவர்களைப் பிரானும் மனமிரங்கி அவ்விதம் அனுக்கிரகம் புரிந்தமையால், மாயூரநாதவள்ளலென்னும் பெயருண்டாயிற்று.

சராசரங்கட்கெல்லாம் அன்னையாகிய உமாதேவியாரான வள் இம்மாயூரநாதவள்ளலாரை ஆகமங்களில் விதித்தவண்ணம்; பூசைபுரிவதற்கு அதிக அன்புகொண்டு பிரமதீர்த்தத்தில் சேடியர்களோடு விதிப்படி ஸ்நானம்பண்ணி விபூதி உத்தூளனஞ் செய்து உருத்திராக்கமணிந்து நித்தியகடன்களை முடித்து நந்தவனத்திற் சென்று, தன்பெருமை வாய்ந்தகரங்களாலும் சேடியர்களாலும், நந்தியாவட்டம், கோங்கு, மந்தாரை, வாதுளை வில்வம், கொன்றை, நீர்முள்ளி, செவ்வகத்தி, பன்னீர், ரோஜா, மருக்கொழுந்து, அறுகு, மல்லிகை, முல்லை, புன்னாகம், பாரிசாதம், அலரி, முதலிய அநேகவிதமான புட்பங்களைக் கொணர்ந்து, அலங்காரம்பண்ணுவதற்குரிய பணிகளாக அமைப்பதற்கும் பலவகை நைவேத்தியங்களைப் பாகம்பண்ணுதற்கும், வாசனை தங்கிய சந்தனஞ் சேர்ப்பதற்கும், பற்பல கனிகளின் இரசங்களைப்பிழிதற்கும், [illegible] ப்பதற்குமுன், பரிசுத்தமான நன்னீர் [illegible] அதிற்கற்பூரப்பொடி முதலிய வாசனைத்திரவியங்களைப் [illegible] பெய்யப்படிக்கும் சிற்சிலர்கட்குக் கட்டளையிட்டு [illegible] அபிடேகத்திரவியங்கள், பரிகலங்கள் [illegible] களும், யாவற்றையும், ஓரிடத்தில் சேகரித்து [illegible] கொண்டு உச்சிகாலத்தில், பூசை புரிவதற்கு முன் [illegible] ஸ்நானம் பண்ணி வந்து மாயூரநாத வள்ளலார் எழுந்தருளியிருக்கும் இடத்தில் சென்று அநுக்ஞை விக்கினேசுரபூசை புரிந்து புண்ணியாக வசனஞ் செய்து இவ்வுலகங்களெல்லாம் வாழும் பொருட்டு, கவ்வியபூசை, [illegible]கலசஸ்தாபனம், அக்கினிகாரியம், விக்கினேசுர பூசை [illegible] பிரார்த்தித்தல் முதலியவைகளை பணிவுடன் செய்து கர்ப்பகிருகத்தில் புகுந்து, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, பஞ்சசுத்தி, பூதசுத்தி, இலிங்கசுத்தி, விருப்புடன் புரிந்து, அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் ஸ்தாபித்து முக்கிய ஆதாரசக்தி, முதற்சத்தி, மண்டலம் வரையில் பூசித்து, உளத்திலங்கண் ஆவாகனஸ்தாபனஞ்செய்து எட்டங்குலத்தில் நியாசம் புரிந்து, சந்நிதானம், சந்நிரோதனம், திக்குபந்தனம், அவகுண்டனம், [illegible] பலவுங் காட்டித்து, பாத்தியம் அர்க்கியம், ஆசமனீயம் நல்கி, அநேக வாத்தியங்கள் முழங்க, தயிலம், மா, நெல்லி, இரசியம், பஞ்சகௌயம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கனிவர்க்கங்களின் இரசங்கள், கருப்பின் ரசம், இளநீர், அன்னம், சுகந்தரசம், சந்தனம், பன்னீர், சகத்திரதாரை, சிருங்கம், வலம்புரிச்சங்கம்,

முதலிய இன்னும் அநேக திரவியங்களாலும், முறைமைப்படி அபிஷேகித்து இடைக்கிடையாறு நீராட்டி நைவேதனம் முதலானதும் செய்து திருமேனியில் ஒத்தாடையிட்டு அழகு பெறப் பரிவட்டஞ்சாத்தி இரத்தினங்களாலிழைத்த கவசமிட்டு பூணுநூல் புரிந்து பொற்றாழ், வாகுவலயம், வயிரங்களினாலிழைத்த பதக்கம், மோதிரம், அரைஞாண் பொருந்தச் சாத்தி விபூதி சந்தனதிலதமிட்டு புஷ்பப்பணிகளுஞ்சூட்டி, தூபதீபம் வழங்கி சித்திரான்னம், பருப்புப்பொங்கல், புளியன்னம், சர்க்கரைப்பொங்கல் பால்டிகில், தயிரன்னம், தோசை, புட்டு, வடை, லட்டுகம், அதிரசம், மோதகம், தேன்குழல், இன்னும் அநேக அபூபவர்க்கங்களும், பானகம் நீர்மோர், இளநீர், சுத்தநீர், இவைமுதலிய இன்னும் பலவகைகளை மிக்க அன்புடன் தனித்தனியாக நைவேத்தியஞ்செய்து, பாத்தியம், ஆசமனீயம் அர்க்கியங்கொடுத்து தாம்பூலம் நல்கி, தூபம், அடுக்குத்தீபம் முதலாகிய பல ஆராதனை செய்து வாசனை தங்கிய அநேகமலர்களால் அர்ச்சித்து நீராஞ்சனம் பண்ணி தீபமெடுத்துப் பருத்திவித்து, கடுகு, வேப்பிலை முதலியவைகளால் திருஷ்டி பரிகாரம் புரிந்து அத்தீபத்திலே போட்டு தாம் விபூதி தரித்து; குடை, கவரி, ஆலவட்டம், சுருட்டி, விசிறி, முதலானவைகளால் உபசாரங்களியற்றி அர்க்கியங்கொடுத்து நறுமலர்களைக் கையின்கண் வைத்து பஞ்சாக்ஷரத்தை மனதில் செபித்து பதினொரு மந்திரத்தால் அர்ச்சித்துப் பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி ஓரிடத்திலிருந்துதெரிசனத் தருவந்திருந்தயாவர்க்கும் பிரசாதம் நல்கி நம்பெருமானுடைய சந்நிதானத்தில் நிற்க; அருட்பெருங்கடலாகிய வள்ளலானவர் அப்பிரமை முன் தோன்றி; உன்னிடத்து மயிலனைய அபயமென்று சரணாகதியடைய அஞ்சலை யென்று திருவாக்களித்ததனாலும் நாமும் அவ்வுருவாய் அமைந்ததினாலும் அபயப்பிரதாயிகையெனவும் அஞ்சலைநாயகி யென்றும் திருநாமங்களோடு நம்பக்கத்திலிருந்து ஜீவகோடிகளுடைய பாசபந்தங்களை நீக்கி அனுக்கிரகம் புரியக்கடவதென்று திருவருள் பாலித்து அவ்விலிங்கத்தின் கண்ணேயமர்ந்தருளினார். அக்கட்டளையின்படித்திருப்பெயர் தாங்கி எல்லாவுயிர்களும் ஈடேறும் வண்ணம் பெருங்கருணையே வடிவமாய அமர்ந்திருந்தருளினாள்.

பிரமனரியென்றிருவருந்தம் பேதைமையால் பரப்பிரமம்யாம், பரப்பிரம்மயாம், என்ற செருக்கினால் வயிரவமூர்த்தியால அவர்கள் திருமேனிக்குண்டாகிய குற்றங்களையும் எண்ணத்தினால் உண்டாகியதோஷங்களையும் நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்; அதற்கிரங்கி பொன்னிநதியில் விதிப்படி ஸ்நானம்பண்ணி உத்தமாபுரத்தில் நம்பெருவுடையனைநாடி அங்கு ஆராதனை செய்து,

அக்குற்றங்களை நீக்கிக்கொள்ளுங்களென உத்தரவுகொடுத்தார்
அவ்விதமாகவே ஆராதனைசெய்து குற்றங்களை நீக்கிக்கொண்டு அதில் விஷ்ணுமூர்த்தியானவர்; பராசக்தியானவள் முன் மயிலுருவான காலத்தில் தாம் பதுகாப்பின் வண்ணா ந்தூக்கிய ஆரண்யமான திருவெழுந்தூர் என்னும் திருப்பதியில் விசுகன் மறைல் ஆலயமமைக்கச்செய்து அதி பரிமளரெங்கநாதனென்னும் திருப்பெயரோடு சேவைசாதிப்பாராயினார். அதற்கிணங்க, நம், தாயாரும் அமர்ந்திருந்தருளினாள்; இவ்வற்புதங்கண்ட உடையவர் முதலிய, மஹரிஷிகளும் புஷ்பமாரி பொழிந்து அங்கு அமர்ந்திருந்தார்கள். பிராமணர்கள் எல்லாவுயிர்களிடத்தும், இரக்கமுடையவர்களாயும், நல்ல தருமங்களைச் செய்பவர்களாயும், நித்தியார்மானுஷ்டானம் அக்னி காரியமுபாசனை இவைகளைப்பண்ணுகின்றவர்களாயுமுள்ள அந்தணர்கள் வசிக்கின்ற கிரகங்களையெல்லாம் தமதாலயமாக அமர்வாராயினார். அவ்விதம் கலைமகளும், உபப்பிரமர்களும் புஷ்பமாரி வருஷித்து அமர்ந்திருந்தார்கள்.

பொன்மலை வல்லியானவள் மயிலுருவடைந்த காலத்தில் அங்கணனார் விடையின் மீதுவருகின்றபோது, விடையூரியநந்திதேவர் நம்மைப்போல துரிதமாய்ச்செல்லக்கூடியவர்கள், இல்லையென்று செருக்கடைய அதையறிந்த புண்ணிய மூர்த்தி பெருவிரலாலழுத்த பாதாளலோகத்தில்சென்று, இடமைதாங்க முடியாமல், மாயூரநாதவள்ளலைப் பற்பல தோத்திரம்பண்ணுவாராயினார் பதிவலையிலடுகின்ற அண்ணலார்; அதற்கிரங்கி; அவ்விதஞ்செய்த இடமாகிய பொன்வீதியின் மத்தியில் நீர் எப்பொழுதும் எழுந்தருளியிருந்து அவ்விடத்தில் ஸ்நானம் பண்ணுகின்றவர்கட்கெல்லாம் இன்பங்களை அனுக்கிரகம் பண்ணுவீரென்று கட்டளையிட்டார் நந்திதேவரென்பவர், இவ்விதம் அனுக்கிரகத்தைப் பெற்று அங்கேயிருந்து, எக்காலத்தும், கெர்வமில்லா திருக்கக்கூடிய ஞானமார்க்கங்களை உபதேசித்து அருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். மாயூரநாத வள்ளலானவர், இவ்வுலகிலுள்ள கங்கை முதலாகிய மூன்றரைக்கோடி தீர்த்தங்களும், ஐப்பசிமாதம் அமாவாசைதிதிமுதல் இந்நதியில் இவ்விடத்தில் ஸ்நானஞ்செய்ய வருவார்களாகையால், நாம், அவர்கட்கு அஞ்சலை நாயகியின், அற்புதத்திருவிழாவெனக்களிக்கும்படி தீர்த்த மகோற்சவங்கொண்டருளிபின் உத்தரமாயூரத்தில் குருவடிவமாய் எழுந்தருளுகின்றோம், அப்போது நீர் கேட்டவண்ணம் அனுக்கிரகம்புரிவோமென உத்தரவு அளித்தார்.

சிகண்டருக்கிராகிய மாயூரநாதவள்ளலென்பவர், முன்சொன்னவிதம் குருவடிவமாய் எழுந்தருளினார்; தேவர்கள் பூமாரி

பொழிந்தார்கள், மேற்சொன்ன ஆதாரவாசைனக்கில் நந்திதேவ ரானவர் சிறப்புடி ஸ்நானம் பண்ணி நித்திய கடன்களை முடித்து க்கொண்டு அருட்பெருங்கடலாகிய அன்னையின் திருவடியைத் தியானித்து கண்மலர் கண்ணீர் ததும்பக் கரமலர்களால் பிசை ந்து வெண்ணலர்ச் செங்கனிவாய், மணிமகரம், புடைபடுப்ப எண ணின் மறைபெருமை பெருக, உவ்வுயிர்ந்தது துதிப்ப, பொறுமை டையாகிய புண்ணிய மேவிட்டவரானவர், சந்நிதானத்தில் வந்து நமஸ்காரம் புரிந்து அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே என்று தோத்திரம் பண்ணி முன் கட்டளையிட்டவண்ணம் அனுக்கிரகம் புரியும்படி பிரார்த்தித்துக்கொண்டு முறைமையில் காரியமாக நிறை றுமினர். குருமூர்த்தியானவர் சிற்பாசிரியர்க்கருளிச்செய்த நான்கு வேதங்களையும், ஆறங்கங்களையும், கற்பனைகளை அருள் பாஷை முனிவர்களால் செப்பித்தெளிந்து அவ்வழியே நடப்பவ ராய், இட்டிசுகமும் பல்வியற்றி சகனைக்கண்டு வைத்து இறவாத புகழ்படைத்தவர்கள், அடைந்திய பேராநந்தத்தினிவாம சைவசித்தாந்தத்தின் பாலாகிய சிவாநுபவச்சிறந்தலாகிய ஞானத்தையும் பழமறைகள் தேடித்தேடி ஞானிகளாலும் உவமை யில்லாத கலைஞானத்தையும் "... கண் ... " ... டிய சுகத்தைச்சொல்லெனில் செல்லும் ... என்றவாக் கியத்தின் வண்ணம் அவரவர்களும், அநுபவத்தற்குரிய ஆனந்த அநுபவமான உணர்தற்கரிமையாகிய மெஞ்ஞானத்தை யும், தீக்ஷைமுறையாலும், தம்திருமேனியில் அமைந்த சின்முத் திரை முதலாகிய திருக்குறிப்புகளினாலும் உபதேசித்தருளி னார். உத்தரமாயூரவள்ளலின் திருநோக்கத்தின்வண்ணம், ஞான அம்பிகையும், அமர்ந்தருளினள். அப்பெருமையைக்கண்ட விநாய கர், சுப்பிரமணியர், முதலிய மற்றுமுள்ள மூர்த்திகளும் அமர்ந்தி ருந்தார்கள். நந்தி தேவர் அநுக்கிரக உபதேசத்தைப்பெற்று இம்மாயூரக்ஷேத்திரத்தில பொன்னி நதியின் பக்கத்தில் மேற்கு முகமாக எழுந்தருளியிருந்து சிவகோடிகளுக்கு அநுக்கிரகம் புரிவாராயினர்.

புரந்தரன், நாரணன், பூவேறுகோன் முதலிய தேவர்கள், இம்மாயூரநாதவள்ளலாரிடம் வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து, எங்கள் நாயகமே திரிபுராதிகள் மிக கொடுமையான இம்சைகள் செய்கின்றார்களென விண்ணப்பித்தார்கள்; பெருமான் அதற்கிரங்கி மகாமேருகிரியை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் கையிற்றாங்கி தேவர்கள் சூழ திரிபுராதிகள் இருக்குமிடஞ்சென்று யோசிப்பாராயினர்; நாம் இக்கணங்கள் மத்தியில்நின்று இதனிரிபுராதிகளை செய்வோமாயின் தேவர்கள் ஆணவமலத்தாற் கட்டுண்டு அகங்காரத்துக்குள்ளாவார்கள், என்றெண்ணி பாணத்தையும் விட்டு அட்டகாசத்தாக்கு வதன்முன் நகைப்பினால

எரியும்படிச்செய்தார். அவ்வாச்சரியத்தைக்கண்ட தேவர்கள் மனம் நெக்குற்று பயமும் தோன்றுது பின்வருவதற்கு வழியுந் தெரியாது மாயூரநாதவள்ளலே யோலமென பற்பல விதமாய் அலறினார்கள்; கிருபைக்கடலாகிய வள்ளலானவர், அதற்கிரங்கி, ஓர் கிராத வேடங்கொண்டு அங்கு சென்று என்ன சத்தமென விசாரித்தார்; கிராதரே யெனக்கூவி தேவர்கள் சென்ற சரித்திரத்தையும், அங்குநடந்த அபயத்தையும், வழிதெரியாமல் படுங் கஷ்டத்தையும், அறிவித்தார்கள்; வேடன் புன்முறுவல் செய்து நாம்வழிகாட்டுகின்றோம், நாமுடன் வாருங்களென அழைத்து வந்து இத்தலத்தின் குறுக்கையில், புன்னைச்சோலை சூழ்ந் தவிடத்தில் விட்டு மறைந்தருளினார். தேவர்கள் மனங்கலங்கி நாற்றிசையும் பார்க்கின்ற காலத்தில் அதிசமீபத்தில், ஓர் சிவலிங் கப்பெருமானைக் கண்டார்கள்; அதைப்பூசித்து, (மாயூரம்) வந்து வழிபாடு செய்து வழிகாட்டின வள்ளலேயென்று தோத்திரஞ் பண்ணி தமதிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

சைவபரமாசாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்த சுவா மிகள், தம் மெய்யடியார் கூட்டத்தோடு இத்தலம் தெரிசிக்கவரு கின்ற காலத்தில் பொன்னி நதியானது, அதிக பிரவாகமாய் வர, இறங்குந் துறை தெரியாது மயங்கி விண்ணப்பஞ்செய்ய, உமை பாகட்கமுதமானவர், அன்புமேலீட்டினால் முன்சொன்ன கிராத வேடந்தாங்கி பொன்னி நதியின் வடகரைச்சென்று நான் துறை காட்டுகின்றேனெனச்சொல்லி முன்வர அந்நதியானது சிலவிடம் கணைக்கால் வரையில் நீருள்ளதாயும் சிலவிடம் மணல் தெரியும் படியாயும், இருக்கத்தென்கரை வந்தார்கள்; அப்போது முன் வந்த வேடுவர் மறைந்துவிட்டார்; சண்பை நகர் வேந்தர், நாற்றிசை யும் பார்த்து யோசிப்பாராயினார். அக்காலையில் அங்கொரு சிவ லிங்கந்தோன்ற அதைப்பணிந்து, இவ்வாலயம் வந்து விதிப்படி தெரிசித்து துறைகாட்டும் வள்ளலேயென அருட்பாமாலை, சாத் தி விடைபெற்றுக்கொண்டு இதன் தென்பக்கத்திலுள்ள, ஸ்தலங் களைத் தெரிசிக்க விருப்புடன் சென்றார்கள்; இது முதலாகிய இன்னும் சிலகாரணங்களால், மாயூரநாதவள்ளலார்க்கு நாற் றிசை வள்ளலாரெனப் பெயருண்டாயிற்று.

அஞ்சலை நாயகியானவள் சந்நிதானத்தில் வந்து நின்று நம ஸ்கரித்து பிரபுவே; கிருபாகடாக்ஷந் தந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனள்; மாயூரநாத வள்ளலானவர், அதிகசந்தோஷம டைந்து தேவர்களையெல்லாம் அழைத்துவரும்படி, நந்திதேவ ருக்குத் தரவளிக்க, அந்நந்திதேவருடைய அற்புதத்திருவாக்குக் கேட்ட எல்லாரும் மாயூரேசன் சந்நிதானத்தில் வந்து சேர்ந்தார்கள்; இரக்கமே திருமேனியாகவுடைய பெருமானானவர்

ஆயிரம் முகத்தையுடைய, பாணுகம்பன் ஆயிரஞ்சங்கூத, ஆயிரந் தோளையுடைய வாணசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்சதுந்துமி யொலியும், வேதவொலியும், கந்தருவருடைய கீதவொலியும், மிக்கெழ, அபயப்பிரதாபத்தையும் மற்றுமுள்ள தேவர்களை, ஆனந்தமாகக்கண்களிகூர்ந்து ஆரகரவென்று [illegible] செய்ய, நம்பெருமான் ஆனந்த நிருசஞ்செய்த [illegible] நந்நாள்முதல் கௌரிதாண்டவமெனப் [illegible] அவ்வித தெரிசனஞ் செய்த தேவர்கள் [illegible] திருக்கல்யா மகோற்சவ தெரிசனஞ் செய்யவேண்டுமெனத்தவம்புரிந்தனர்கள். அத்தவத்திற்கிரங்கி, அன்பர்கட்கு அமுதமாகிய வள்ளலானவர் அவ்விதமேயருள் புரிந்தனர். அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அதிசந்தோஷமுடையவராய் விசுவகர்மனை வரவழைத்து எல்லையைக் குறிப்பிட்டு ஆதனுள், நான்கு கோபுரங்கள் வாய்ந்த திருமதில்கள், ஆகமங்களில் விதித்தவண்ணம் ஆலயம் அமைக்கும்படி கட்டளையிட்டனர், அக்கட்டளையைச் சிரமேற் றாங்கி, கற்பகிரக விமானங்கள், திருநடன மண்டபம், திருவாராதனை மண்டபம், திருக்கல்யாண மண்டபம், வசந்தோற்சவ மண்டபம், ஆகம வித்தியா மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பாக சாலை மண்டபம், முதலாகிய பற்பல மண்டபங்களும், பளிங்கினாற் சுவரும், விலை மேன்மையாகிய கற்களால் தூண்கள், போதிகைகள், சரங்கள், உத்திரங்கள், கொடுங்கைகள், அமைப்பித்து அதன்மீது பொன் தகடுகள் பரப்பி ஏறிச்செல்வதற்குச் சுவர்ண ப்படிகளியற்றி, அம்மண்டபங்களின்மீது அலங்காரமாக இரசமணிகள், தொங்கவிட்டுத், தீர்த்தப்படித்துறைகள்முதலாகிய யாவற்றும், இயற்றிவித்தனர்; தேவர்கள் பார்த்து, கண் களிகூர்ந்து மிகக்களிப்படைந்து சிலர்கள் கல்யாணமண்டபத்தை அநேகக்கனிகளாலும், புஷ்பமாலைகளாலும், வாழைகளாலும், அலங்காரஞ்செய்து இரத்தினங்களாலிழைத்த, மணவறையியற்றுவித்து அதில் பொற் பீடம் அமைப்பித்தார்கள்; சிலர்கள் அதற்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்பவர்களும், சிலர்கள் அங்கரமாலிகளுக்குத் திருமுகம் விடுப்பவர்களும், சிலர்கள் அட்டில்கள் செய்பவர்களுமாயிருந்தார்கள்; இத்திருமுகங்களை பெற்ற யாவர்களும், ஐப்பசி மாதத்தின் தவத்தின் பிரயோசனத்தைக்குறித்து அதிக சந்தோஷமடைந்து, பந்து, மித்திர, குடும்பசமேதராய், சிலர்கள் யானையின்மீதும், சிலர்கள் குதிரையின்மீதும், சிலர்கள் சிவிகையின்மீதும், சிலர்கள் பாதசாரியாயும், வந்திறங்கினார்கள், வருகின்றவர்கட்கெல்லாம், சிலர்கள் தாம்பூலங்கொடுப்பவர்களும், சந்தனம் பூசுபவர்களும், புஷ்பமாலைசூட்டுபவர்களும், அறுசுவையோடு அமுதளிப்பவர்களுமாயிருந்தார்கள்; அநேகவாத்தியங்கள் முழங்க தேவர்கள் ஆடிவெண்மதிசூடிய

பெருமானை பிரார்த்தித்து, அழைத்து வந்து பொன்னாசனத்
தின் மீது எழுந்தருளச்செய்து கடகங்கணமணிவித்து, கும்பத்
தில் பூஜைபுரிந்து, திருமணத்திற்குரிய நாளிடுகல் முதலாகிய
சடங்குகள் செய்து திருமஞ்சனசாலைக்கு அழைத்துக்கொண்டு
போய் கெங்கை முதலாகிய பரிசுத்த நீரினால் ஸ்நானம்பண்ணுவித்
துக் காப்பத்து, கன்னியூட்டி நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி
சுவாமிகள் பெருமானுடைய திருமேனியில் ஒத்தாடையிட்டு
து முக்கியபணியாகிய விபூதிவட்டகையைத் தாங்க ஞானமூர்த்
தியானவர் தம்பெருமை வாய்ந்த திருக்கரத்தினால் விபூதியை
எடுத்தணிந்தனர். பின் தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி திருச்
சடை நெற்றிக்கண் எலும்புமாலை பிரமகபாலம் புலித்தோலாடை
கரித்தோல் போன்றவை இவைகளை மறைத்து, பொன்மயமானசுயம்
பிரகாசவடிவமாயினர். முத்தேவர்களும் ஐயனது சிரசில் உயர்
ந்த இரத்தினங்களால், இழைத்தகிரீடம் நெற்றியில் திலகம், திரு
ச்செவியில் அலங்காரவேடம், இடையில் சுவர்ணங்கலந்த பட்டா
டையும், மேல் உத்தரியமும் கழுத்தில் முத்தாரங்களும்,
பொரழுக்கமைந்த பதக்கங்களும். பொற்பூணூலும், விரலணிகளும்,
அரைஞாண் முதலிய இன்னும் அநேகதிருவாபரணங்களும், அல
ங்காரஞ்செய்து, இவ்விதக்கோலத்தோடு பொன்மயமான விமானத்
தின் மீது திருவுலாக்காட்சி தந்தருளவேண்டுமெனப் பிரார்த்தி
த்தார்கள். அருட்பெருங்கடலாகிய அண்ணல் அதற்கிசைந்து
தடாரி, பேரி, முருடு, மொந்தை சின்னம் பம்பை, சங்கம், தாளம்
வீணை, இது முதலாகிய இன்னும், பற்பல வாத்தியங்கள் முழங்க
முத்துக்குடை, கொடி, கவரி, ஆலவட்டம், தால்வட்டம், அவுதா
க்கள், சுருட்டி, கோணத்தடி, முதலாகிய பலவிருதுகள் முன்
செல, வேதபாராயணங்கள் தேவார திருவாசக பாராயணங்கள்
பின்வர, தேவர்களும், தேவதாசிகளும், சூழ்ந்துவர பிரமா,
விஷ்ணு கைலாகு கொடுக்கப் பொற்பாதுகையின்மீது பாதசாரி
யாக வந்து மேற்சொன்ன விமானத்தில் ஆரோகணித்து உலாக்
க்ககாட்சி தந்தருள, அங்குள்ள ஸ்திரீகள் அநேகர்கள் சுயம்பிர
காச வள்ளலை உத்து நோக்குகின்ற போது மன்மதன், பஞ்சபா
ணங்களையும் பொழிய அதனால் சயாந்தகார மெனுங்களுண்டு
இடையிலே நிகழ்ந்தனர், வளையல்கள் கழன்றவர்களும், புன்
முறுவல் செய்பவர்களும், அதாவது குற்றுரிய பலவர்ணத்தை
கள் [illegible] இருந்தார்கள். இவ்விதகாட்சியுடன் ஆல
யம் வந்து சேர்ந்து மேற்சொன்ன கல்யாணமண்டபத்தின்கண்
ணுள்ள மணவறையமைந்த பொன்னாசனத்தில் வலதுகால்மடக்கி
அமர்ந்தருளினர், அரம்பை, ஊர்வசி முதலிய தெய்வப்பெண்
கள் பக்கவாத்தியங்கள் முழங்க தாண்டவம்புரிய வல்லகம்பிரான்
முன்னர் பாதம் ஆடினார்கள்,

இலக்குமி, சரஸ்வதி, இந்திராணிமுதலிய தேவஸ்திரீகள் அஞ்சலைநாயகியைத் திருமஞ்சனச்சாலைக்கு அழைத்துக்கொண்டுபோய் வாசனை தங்கிய, தயிலங்கள் தேய்த்து நன்னீர்களால் ஸ்நானஞ்செய்வித்து திருநீராடையிட்டுப்பணிப்பெண்கள் விபூதி வட்டகையைத் தாங்க, தன் திருக்கரத்தினால் விபூதியை எடுத்துத்தரித்தனள். தேவஸ்திரீகள், சுவர்ணங்கலந்த பட்டாடையினால் இடையில் முன்கொசுவம் வைத்து தரிப்பித்து வலது தோளிலுத்தரீயம் இட்டு கச்சணிவித்து அநேகபற்கள் வாய்ந்த தந்தச்சீப்பினால் சுரிகுழல் வாரி நவரத்தினங்கள் இழைத்த இராக்குடி, வளைதாழம்பூ, சடைநாகம், சடைப்பில்லை, குஞ்சம், இவைகள் பொருந்தச்சடையாகப்பின்னி, சந்திரப்பிறை, சூரியப்பிறை வாகுசுட்டி நெற்றியில் திலதம், காதணிகள், மூக்குத்தி, நத்து, புல்லாக்கு, கழுத்தில் பவிக்ஷமயிலீது முத்துமாலை, பவுன்மாலை காசை, மேன்மையான பதக்கங்கள் கரங்களில் வளையல் காப்பு, கொலுசு, பாட்டில், விரலணிகள், இடையில் ஒட்டியாணம், பாதங்களில் பாடகம், தண்டை, சிலம்பு, கொலுசு, கிண்கிணி, சதங்கை, முதலாகிய இன்னும் அநேக திருவாபரணங்களால் அலங்கரித்து ஐயனது பக்கலில் அமர்ந்திருக்கச்செய்தார்கள். சிந்தையும் அம்மனையும் தாமே எனது நாயகன் என்றும், நீயே எனது நாயகி என்றும் குறிப்பமையும்படி மாலையிட்டுக்கொண்டார்கள். பின்னர் விக்கினேசுரபூசை கும்பத்தில் பூசை பாலிகைகளைத்தல் முதலாகிய இன்னும் பலசடங்குகளியற்றி உலகங்கள் வாழும் பொருட்டு கங்கணம் அணிவித்தார்கள். விஷ்ணுமூர்த்தியானவர் இருவர்களையும் மனசினால் பூசித்து இருவர்களுடைய பெருமை புகழ் கூறி அபயப்பிரதாம்பிகையை பூரணநிலையில் திக்குகன்னிகாதானஞ்செய்துகொடுத்தேனென இட்டு நீர்வார்த்தார். தேவர்கள் எல்லாரும் அஞ்சலிசெய்து அரகரவென்று ஆர்ப்பரித்தார்கள். பிரமதேவன் அக்கினிகாரியஞ்செய்ய அநேகவாத்தியங்களும் தேவதுந்துமியும் கடல்போல் ஒலிப்ப, பரமசிவனானவர் மூவுலகும் வாழும்படி அம்மையின் கழுத்தில் அமைதரத்திருமங்கலசூத்திரத்தைத்தரித்தருளினார். தேவர்களும் மற்றும் யாவர்களும் சந்தனம் புட்பம், மாரியாகப்பொழிந்தார்கள். வள்ளலானவர் அம்பிகையின் கைவிரலைப்பிடித்து ஓமாக்கினியின்முன்பாகச் சென்று அக்கினிபகவானுக்குத் திருப்தி உண்டாகும் வண்ணம் இருவருகளும் பொரியிட்டு புட்பம் நிறைந்த அம்மியின்மீது அஞ்சலைநாயகியின் பாதத்தை, ஒருகரத்தால் தூக்கிவைத்து அருந்ததியைத் தெரிசிக்கும்படிச்செய்து அக்கினிவலம் வந்து முன்சொன்ன பொற்பீடத்தின்மீது, அமர்ந்திருந்தார்கள். தேவர்களும் தேவஸ்திரீகளும் அக்ஷதையால் மணமுடிம் மாலையும்

பொற்பணமும் இட்டுவைத்திருக்கிறார்கள். பொன்மலைவல்லியம்மை புனிதனுடன், இளம்பரிதி நூறாயிரங்கோடி போல கட்டழகு திப்பிய ஜொலிக்கும் [illegible] எழுந்தருளி முன் [illegible] புனைசெலு வேதபாராயணம் தமிழ் வேதபாராயணமும் பின்னே, தேவர்களும் தேவதாஸ்திரிகளும் சூழ்ந்துவர திருப்பணித் திருவலக் காட்சி தந்தருளினார். அப்போது அங்குள்ள உமாபதிகளும், ஸ்திரிகளும் பூரணகும்பங்கள் வைப்பாரும், கற்பூர ஆரத்திகள் எடுப்பாரும், தாம்பூலம் கொடுப்பாரும், சந்தனச்சேறு இறைப்பாரும், பன்னீர் தெளிப்பாரும், கனிவகைகளைக் கொடுப்பாரும், கற்கண்டு, சர்க்கரை, பூரிகளை அளிப்பவரும், தீபத்தினால் திருஷ்டி பரிகாரம் புரிவாரும், அநேகர்கள் இவ்வண்ணம் [illegible] பெற்றதின் பிரயோசனம் இத்தரிசனம் [illegible] எனப் புகழ்வாருமாய் ஆலயம் வந்து பின், செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்துக்கொண்டு யாவர்களையும், பரானந்தமயமாக்குவித்தற்குரிய பொன்னிநதிக்குச் சென்று தீர்த்த மஹோற்சவங் கொண்டருளி ஆலயம் வந்து தேவர்கள் முனிவர்கள் யாவர்கட்கும் விருந்தமுதளித்து தாம்பூலம்; சந்தனம், புட்பம், வஸ்திரம், ஆபரணங்கள் அளித்து அவரவர்கள் இருக்குமிடஞ் செல்லும்படி உத்தரவு கொடுத்து இலிங்கத்தின் கண் மறைந்தருளினார், அஞ்சலை நாயகியாளவள், அடியார்களை அஞ்சவேண்டாமென ஆதரிக்கும் குறிப்பை ஓர் கரத்தினால் காட்டி மற்றொரு கரத்தை இடுப்பினில் தரித்து வீற்றிருந்தருளினள். இவ்வற்புதங்கண்ட, விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகப்புனிதச்செல்வன், மற்றுமுள்ள மூர்த்திகளும் இவ்வாலயத்துள் அமர்ந்தனர்கள்.

முன்கற்பகாலத்திறுதியில் இவ்வுலகின்கண்ணுள்ள மூன்றரைக்கோடி தீர்த்தங்களும் ஜீவகோடிகள் ஸ்நானம் பண்ணுவதினால் அப்பாவங்கள் அவர்களைச்சார்ந்து சரீரமகறுத்து அதனால் துன்பமடைந்து அக்குற்றங்களை நீக்கிக்கொள்ளும் வண்ணம் கைலாயத்தில் சென்று தவஞ்செய்தார்கள். கண்ணுதல்பிரான் அவர்கள் கருத்தையறிந்து கௌரிமாயூரஞ்சார்ந்து பொன்னிநதியில் இடபதீர்த்தக் கட்டத்தில் ஐப்பசி மாசத்தில் ஸ்நானஞ்செய்து அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளும்படி கட்டளையிட்டனர். அத்தீர்த்தங்கள் [illegible] க்கிரம வருவதற்குரிய பாவை வடிவங்கொண்டு, வந்து கட்டளைப்படி ஸ்நானஞ்செய்து வள்ளலாரையும், அஞ்சலைநாயகியையும் அடிபணிந்தேத்தி அக்குற்றங்களை நீக்கிக்கொண்டு அவரவர்கள் இருக்குமிடஞ்சென்று ஒவ்வொரு வருடங்களிலும் வருகின்ற ஐப்பசி மாசத்தில் மேற்கூறிய

வாறு செய்துபின்வாராயினார்கள். அதில் தெய்வ கெங்கையும் அவ்விதமாக ஒவ்வொரு வருடத்திலும் ஐப்பசி மாசம் அமாவாஸ்ச திதி முதல் வந்து இத்தீர்த்தத்தில் படிந்து நாற்றிசைவண்ணக்லயும், அபயப்பிரதாயினிகையையும் அபயவணிந்தேத்தி ஆராதனைசெய்து அபமரதம் முடிந்தவுடன் விடைபெற்றுக்கொண்டு திருநந்திக்கவர் செல்வதிக்கொண்டேக்காசிக்குச்செல்லும் காரணத்தாலே இத்தலத்தில்ல விருப்பத்தினலே (காசி) விசுவநாதர், இருமகளாகிய தெய்வகங்கை வருகின்றதினைத்து தேவதூதரிமுழக்க, தேவர்கள் பூமாரி பொழிய இப்பொன்னி நதியின் தென்கரைசார்ந்து இலிங்கவடிவமாய் அமர்ந்தருளினார். அவ்விதமாக விசாலநேத்திரம் பொருந்திய அன்னபூரணியாகிய அம்மையும் அமர்ந்தனள். இவ்வற்புதங்கண்ட, துண்டிவிநாயகர். சுப்பிரமணியர், பைரவர், சண்டேசுவரர்களும் ஆலயத்திலும் தீர்த்தக்கட்டத்திலும் அக்காசிக்ஷேத்திரம் எத்தன்மையதோ அதிலும் விசேடமாய் அமர்ந்தார்கள்.

விரிகடலால் சூழ்ந்த இக்காசினியில் மேன்மையான தேவ அந்தணர் குலத்தில் நாதசன்மன் என்னும் நற்பெயர் தாங்கி கற்பிற் சிறந்த அனாவித்தை என்னும் மனைவியோடிருந்து இல்லறம் நடாத்தி, கடவுளர்க்கு அன்பென்றுள அவரேதம்மை ஆன்பவர் என்றும் சரியையின் நெறிதனை அநுட்டித்து வந்தார். ஏத்தவத்தினுல் அவ்விருவர்களும், மைந்தனையடைந்து குவித்த கையுடையவர்களாய் இரண்டாக்கலக்கும் இன்பம் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்; அப்பிரார்த்தனை யறிந்த புலித்தோல் தரிக்கும் புனிதரானவர் வையகஞ்சென்று நடக்கு வழிபாடு செய்து அவ்வரங்களை நீங்கள் அடைவீர்களென, அனுமதி கொடுத்தார். அவ்விதமாக இத்தரை வந்து அதற்குறிய ஸ்தலம் யாதென ஆராய்ச்சிசெய்து விருத்தாசலம் வந்து, ஸ்நானம் ஆராதனை விதிப்படிச்செய்தார்கள். அத்தலத்தயப்பெருமான் அன்பு மேலீட்டினுல் ஐயாறடைகென அருள்வழங்கிட்டார். அவ்விதமாக ஐயாற்றரசையும், அறம்வளர்த்த செல்வியையும், ஆராதனை செய்ய; அவர் குறிப்பறிந்து அதற்குரிய [illegible] சிக்கு கௌரீமாயூரமேவார்; [illegible] ன்று நம்பின் [illegible] இந்த க்ஷேத்திரத்தில் பொன்னி நதியில் [illegible] னம் விதிப்படி புரிந்து காசிவிஸ்வ[illegible] தாண்டவஞ் செய்த மாயூரநாதவள்ளலையும் அபயாம்பிகையையும், அன்போடு வணங்கி உத்தரமாயூரஞ்சார்ந்து உபதேச அனுமதிகளும் பெற்று தெட்சணமாயூரத்திய் திருப்பெருந்தகையன் குருவாய்மலர்ந்து திருவையாற்றுக்குச்செல்ல திரும்பினர் செல்வர். அந்த

நற்காலையில், நாகசன்மன், அனவித்தை இருவர்களும் அடியே
ங்களை ஆட்கொள்ளும் இடமிதுவாதலால் எக்காலத்தும் இவ்விட
த்திலெழுந்தருளி ஏழைகட்கிரங்கி இன்பம் அருளக்கிருக்கவேண்
டுமெனப் பிரார்த்தனை செய்தார்கள். அவர்களிடமுள்ள அன்பு
மாறாது செல்லும் நிர்க்குணியாக, இலிங்க
பெருமான். அக்குறிப்பின் வண்ணம்
அவ்வாறுசங்கண்ட விநாயகர், அப்பிரம
னையர் முதலாகிய மூர்த்திகளும் இந்திரன் பெருமான் முதலாகிய
தேவர்களும் வடகையிலே, தென்கையிலே இரண்டிடம் ஒன்றாய்க்கூ
டியது சௌரிமாயூரமெனச் சங்கோசமடைந்து அருகாமையோடு
முழக்கொலிசெய்து புட்பமாரிபொழிந்து அமர்ந்திருந்தார்கள்.

நாகசன்மன், அனவித்தை என்னும் இருவர்களும் முன்
கட்டளையிட்டபடி ஸ்நானஞ்செய்து உத்தரமாயூரத்தில உபதே
சம்பெற்று அதைச்சார்ந்த திருத்துறைபுரம், கோன்மீச்சரம்,
கஞ்சாறு, தருமபுரம் முதலாகிய தலங்களை ஆராதனைசெய்து,
கொண்டு மாயூரம் வந்து வள்ளலாருக்கும் அஞ்சலைநாயகிக்கும்
அருந்தொண்டு புரிந்தார்கள். அன்பினுக்கெளிய ஐயன் பிரசன்
னமாகி இவர்கள் கருத்தையறிந்து இந்தக்ஷேத்திரத்தில் ஈம்பக்
கத்தில் நீரும் அபயம்பிரதாம்பிகையின் வலப்பக்கத்தில் உமது
மனைவியும் நம்மை இலிங்கபிரதிஷ்டைபண்ணி தினந்தோறும் பூசித்து
வருவீர்களாயின். உங்கள் கருத்தின் வண்ணம் பாமுத்தியனுக்கி
ரகம் பண்ணுகின்றோம் எனத்திருவாக்களிக்க அவ்விருவர்களும்
சந்தோஷமாகி, நாங்கள் ஆராதனைசெய்யும் இலிங்க வடிவத்தை
யாவர்களும் தெரிசனஞ்செய்யும்படி கட்டளையிட்டருளவேண்டு
மெனப் பிரார்த்தித்தார்கள். அதற்குமனமிரங்கி நம்மை தெரி
சிக்கும் தேவர்களும் மற்றும் யாவர்களும் நீங்கள் பூசித்துவரும்
நம திருவுருவத்தை தெரிசியாவிடில் நம்மை தெரிசித்த பலனையு
டையமாட்டார்கள் எனத்திருவாக்குக்கொடுத்து அவ்விதஞ்செய்ய
க்கடவதெனத்தேவர்கட்குங் கட்டளையிட்டருளினார். அவ்விருவர்
களும் மேற்சொன்னவண்ணமாக இலிங்க பிரதிஷ்டைசெய்து
பூசித்துவருவாராயினார்கள். மாயூரநாதவள்ளலாரும் அவ்விலிங்
கத்தின்கண் அமர்ந்தருளினார்.

இன்னும் நைமிசமுனிவர்கள், அகத்தியர், கண்ணுவர், புல
த்தியர், காசிபர், முதலாகிய அனேக முனிவர்களும், ஜனகாதியர்
களும், தாருவனத்தில் பூர்வமீமாஞ்சையில் விதித்த பிரகாரம்,
கர்மமே, பிரமப்பொருளெனக்கொண்டு தவஞ்செய்த நாற்பத்
தெண்ணாயிரம், ரிஷீசுரர்களும், அவர்கள் பத்தினிமார்களும்,
இலக்குமியும் கலைமகளும் அயோத்தியாபுரியை ஆண்ட திலீபன்,
தசரதன், முதலிய சக்கிரவர்த்திகளும், இலங்கை வேந்தனும்,
அஸ்தினாபுரியையாண்ட பாண்டு, பஞ்சபாண்டவர்கள் முதலாகிய

மகாராஜாக்களும், யானை, குதிரை, நரி, குரங்கு முதலிய மிருகவர்க்கங்களும், கழுகு, கிளி, முதலாகிய பறவை வர்க்கங்களும் பாம்பு முதலிய ஊர்வனவும், பொன்னி நதியின் மணலின் கணக்கினும் அப்பொன்னி நதியில், இடபதீர்த்தக்கட்டத்தில் ஸ்நானம் பண்ணி மாயூரநாத வள்ளலையும், அஞ்சலை நாயகியையும், மற்றும் அந்த க்ஷேத்திரத்துள்ள பெற்றெண்ண ஆலயங்களிலும் அடிபணிந்து அர்ச்சித்து ஆராதனை செய்து அவரவர்கட்கு வேண்டிய இஷ்டகாமியங்களையடைந்து, இவைகளையனுபவித்தவர்களை கணக்கிடுவதற்கு முடியாது. இவ்வித விசேஷமமைந்த இந்த க்ஷேத்திரத்தில் ஒவ்வொரு வருஷங்களிலும் வருகின்ற ஐப்பசி மாதங்களில், இப்பொன்னி நதியில் இடபதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகின்ற ஜீவகோடிகட்கு இஷ்டார்த்தங்களையனுக்கிரகம் பண்ணும்பொருட்டு, தெட்சணமாயூரவள்ளல், உத்தரமாயூர வள்ளல், விசுவநாதர், ஐயாற்றரசர், ஒவ்வொருவரும் அம்பிகா சமேதராய், விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசர், புடைசூழ மாதப்பிரவேசம், அமாவாசை முதலிய புண்ணிய தினங்களிலும், பிரமமஹோற்சவங்கொண்டருளியும், இடபவாகனம் முதலாகிய பற்பல வாகனங்களிலும், மகா இரதங்களிலும் இச்சிவஸ்தல மகாவீதிகளில் திருவுலாக்காட்சிதந்தளியும்; பரிமளரங்கநாதர் நம் தாயார் சமேதராய், உடையவர் முதலிய பக்தர்கள் புடைசூழ கெருடவாகனம் முதலிய பற்பலவாகனங்களிலும் பஞ்ச இரதத்திலும் அவ்வைகுந்த மகா வீதியில் திருவுலாக் காட்சியாகிய சேவைசாதித்தருளியும் தீர்த்தப்பிரசாதமனுக்கிரகப்புரிந்து வருதல் யாவர்களும் அறிந்த விஷயமே. ஆனால், பூமி, புத்திரா புத்திரி, அருள், சுவர்க்கம், சிவானந்தப்பேறு முதலிய இன்னும் அநேக விதபேறுகளுள், யார் யார், எவை வேண்டுவனவோ அவ்வாறு செய்தற்குரிய, இம்மாயூரத்தலத்தையும், தீர்த்தத்தையும் முறையாய் அடைய விரும்பினவர், தாய்பாலத்துக்குப்பயந்து தருமநெறியாலேதேடிய பொருள்கொண்டு யாத்திரை பண்ணுக. சுபதினத்திலே நித்திய கருமமுடித்து, இயன்றமட்டுமே பரமேசபூஜையும் பிராமணபோஜனமும் நடத்திக்கொண்டு சுபமுகூர்த்தத்திலே புறப்படுக, காமக்கோப முதலிய குற்றமனைத்துந்தீர்ந்து, நாடோறுஞ்சிவபுராணமுதலிய சைவநூலும் படித்தல் கேட்டல் செய்து, ஒருபொழுது புசிக்க. புசிக்கும்பொழுது வந்த வறியவருக்கு மறுக்காது ஒரு பிடியன்னமேனுங்கொடுத்துப்புசிக்க. வழியில் இடையிடையே நேர்பட்ட சிவாலய விஷ்ணுவாலய சுப்பிரமணியாலயங்களைத் தப்பாது அடைந்து, தரிசித்து வணங்கிச்செல்க. இப்படிச்சென்று, கௌரிமாயூரத்தினது திருவெல்லையை அடைந்து, திருக்கோபுரத்தை தூரத்தேகண்டவுடனே, மனமுருகக் கண்ணீர்ததும்ப, உரோமஞ்சிலிர்ப்ப, இரண்டு கைகளையுஞ் சிர

...க்கு ... ஆப்பூமியில் விழுந்து பலமுறை நமஸ்கரித்து எழுந்து
ச...ங்களை உச்சரித்துக்கொண்டு நடக்க. வழியில் இடையிடையே
நமஸ்காரஞ்செய்து ஏகசித்தராய் ...ண்ணிக்கொண்டு சென்று
கௌரிமாயூரத்தை அடைக.

கௌரிமாயூரத்தை அடைந்தவுடனே, அத்தலத்தின் ...
வெளியிருந்தே நமஸ்காரம்பண்ணித் திருக்கோயிலையுந் திருப்புறத்
தேவதைகளையுஞ் செய்து விருப்பத்தோடு தரிசித்துக்கொண்டு, காவேரி நதியை
யடைந்து ஆசமனம்பண்ணி வலக்கை ஆழிவிரலிலே பவித்திரஞ்
சேர்த்துச் சற்பிராமணரைக்கொண்டு கூட்டிப் பிராணாயாம
முஞ் சகலீகரணமுஞ்செய்து சங்கற்பஞ் சொல்லி ஸ்நானம்பண்
ணுக. ஸ்நானஞ்செய்தவுடனே, கரையேறி, சுத்தமான வஸ்
திரம் இரண்டு தரித்துக்கொண்டு, சந்தியாவந்தன முதலியன
முடித்து, க்ஷேத்திரபிண்ட பிதுர்க்கள் நிமித்தம் கயாசிரார்த்
தஞ்செய்து பிராமணருக்குத் தம்மால் இயன்ற தானஞ்செய்து
ஸ்ரீ பஞ்சாட்சரத்தை நூற்றெட்டுருச்செபிக்க.

அதன் பின் மாயூரநாதஸ்வாமியின் திருக்கோபுரவாயிலை ய
டைந்து நமஸ்கரித்து ஆலயத்தினுள்ளே சென்று முன்சொன்னவிதப்
படி பிரபதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, ஆலயவலஞ்செய்து உள்
ளே சென்று முறைப்படி தரிசித்து அனலிடைப்பட்ட மெழுகு
போல மனமுருகித் திருக்கண்களினின்றும் ஆனந்தவருவி பொழி
ய, மெய்ம் மயிர்சிலிர்ப்ப, நாத்தழுதழுப்பத், தோத்திரம்பண்ணி
மீட்டும் வலஞ்செய்துகொண்டு சந்நிதியை அடைந்து, முன்போல
நமஸ்கரித்து இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுருச்செபித்
துக்கொண்டு எழும்புக.

அதன் பின் அஞ்சநாயகியின் திருக்கோயிலை அடைந்து,
நமஸ்கரித்து முறைப்படி தரிசித்து சந்நிதியில நமஸ்காரஞ்செய்து
தேவி திருமந்திரத்தை நூற்றெட்டுருச்செபித்துக்கொண்டெழுந்து
திருக்கோயிலெல்லையைக்கடந்து, உறைவிடத்தை அடைக. இக்
கௌரிமாயூரத்தில் மேற்சொன்ன மற்றுமுள்ள ஆலயங்கள்
ளும் இவ்விதம் வழிபாடுசெய்க. அன்றியவைகளிலும் இப்படியே
தரிசித்துக்கொண்டு, நித்திரை செய்து சூரியோதயத்துக்கு முன்
எழுந்து அவசியகருமமுடித்து மெள்ள நதியில் ஸ்நானஞ்செய்து
சற்பிராமணருக்கு இயன்ற தானங்கொடுத்து, இயன்றமட்டும்
பரார்த்த பூஜையும் பிராமணபோசனமும் நடத்திக்கொண்டு
தம்மெண்ணத்தோடு போசனம்பண்ணுக. இந்த க்ஷேத்திரத்
தில் இப்படியே ஆயுள் எல்லைவரையயினும், ஒருவருஷமாயினும்
ஒவ்வொருவருஷத்தில் வருகின்ற ஐப்பசிமாசமாயினும். அங்...

பகலிலேனுங் காலையிலாயினும், ஒருநாளாயினும், மூன்றுநாளாயினும், நியமத்தோடு விரதமிருந்து [illegible] பெரியவர்களோடு கூடியிருந்து [illegible] புசிக்க [illegible] சிவ [illegible] திருக்கோயில் [illegible] சிவபூசை [illegible] அபிஷேகம் [illegible], [illegible] விபூதி [illegible], [illegible] முதலியவைகளை [illegible] பஞ்சாக்ஷர [illegible], [illegible], சங்கீர்த்தனம், [illegible], [illegible] சிவஸ்தோத்திரம், [illegible], [illegible] பாராயணம், சிவபுராணபடனம், சிவசாத்திரபடனம், திருவாசகபாராயணம், [illegible] சிவார்ச்சனை, [illegible] முதலிய சிவபுண்ணியங்களை [illegible] நியமமாகச் செய்துகொண்டு, [illegible] நிலைபெறுக.

[illegible] மனமுருகிக் கண்ணீர்வார பக்தி [illegible], [illegible] நதியில் ஸ்நானஞ்செய்து சிவதரிசனஞ் செய்து சிவஸ்தோத்திரங்கள் [illegible] முதலியன செய்கிறவர்கள் அப்பாவங்களை நீக்குவர். பின்பு பாவஞ்செய்யலாகாது, புண்ணியத்தைக் [illegible] தானமுதலியன செய்துகொண்டு [illegible] எப்பொழுதும் ஒருசிறிதும் [illegible] பாவஞ்செய்கிறவர்கள் [illegible] சிவராத்திரி [illegible] பற்பலபுண்ணியங்களைச் [illegible]. [illegible] ஆகவினாலே யாவரும் [illegible] பாவஞ்செய்யாமல் [illegible] செய்யும் [illegible] சிவபெருமானைப் பிரார்த்தித்துக்கொண்டு, அவர் திருவருள்வழியே சாவதானமாக ஒழுகுவார்களாகில் இம்மையில் இஷ்டகாமியங்களையும் மறுமையில் மோக்ஷத்தையும் அடைவார்கள்.

ஆதலால், மேலும் இக்காலத்தில் மஞ்சள், புஷ்பம், குங்குமம், கண்ணாடி, அரிசி, உளுந்து, பச்சைப்பயறு முதலாகிய தானியங்களும், பின், பூமி, அன்னம், வஸ்திரம், தேங்காய், வெல்லம், கனிகள், கன்னிகை முதலிய தானங்களை அன்புடன் அளிப்பவர்கள் அத்தானபலன் ஒன்றுபலவாகி அதற்குரிய இன்பங்களையும் அனுபவித்து மோக்ஷபதவிகளையும் அடைவார்கள். இவ்விதம் செய்தற்குரிய பொருள்களும் சரீரசக்தியும் இல்லாதவர்

கள் ஏகமனதுடையவர்களாய் விபூதி ருத்திராக்ஷம் பஞ்சாக்ஷரம் ஸ்ரீமாயூரமென்று கூறிய அன்றுஞ் செய்பவர்களாயின் அவர்கள் வேண்டும் சகல போகங்கள் முதலாகிய இன்பங்களையும் பெறுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

"பாரூக்கு மாயூரத் தலம்வாழ் அருள் வள்ளற் பரமன் வாழ்க
மேரூக்க கருந்தடங்கண் அஞ்சொல்நாயகி வாழ்க விருக்கொன்று
நாரூக்க மனத்தர் பரவு சிவபெருந் தகைவ நெறிநின்று வாழ்க
சீரூக்கத் தம்பலத்துள் ஆனந்த நடநவில் குஞ்சிதத்தாள் வாழ்க"

(திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க).

(முற்றும்)